விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 02 வெள்ளிக்கிழமை (17.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 363

RAMCO — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT
ராம்கோ
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# லியம் பொக்ஸ் விஜயத்துக்கு பிரித்தானிய அரசு அதிருப்தி!

## இவ்வாரம் இலங்கைக்கு வருகிறார்



(லண்டன்)

பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸ் கொழும்புக்கு மேற்கொள்ளவுள்ள விஜயம் குறித்து அந்நாட்டு அரசாங்கம் அதிருப்தி கொண்டுள்ளது. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் ஞாபகார்த்த சொற்பொழிவு ஆற்றுவதற்காக கொழும்புக்கான தனிப்பட்ட விஜயம் ஒன்றை இவ்வார இறுதியில் அவர் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(16ஆம் பக்கம் பார்க்க)*

## ஆனைக்கோட்டையில் நள்ளிரவில் திருட்டு 10இற்கும் மேற்பட்ட திருடர்கள் கைவரிசை

### 3 இலட்சம் பெறுமதியான நகைகள் பறிபோனது

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையிலுள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் ரூ.மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

மானிப்பாய் வீதியில் ஆறுகால்மடச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் வீட்டிற்குள் நுழைந்த 10க்கும் மேற்பட்ட திருடர்கள் கதவினைத் திறக்கும்படி வீட்டுக்காரர்களை மிரட்டிப் பின்னர் கதவின் மேல் காணப்பட்ட கண்ணாடிகளை அடித்து நொருக்கியுள்ளனர்.

இதனால் பயமுற்ற வீட்டுக்காரர் கதவினைத் திறக்க உள்ளே நுழைந்த கொள்ளையர்கள் வீட்டுக்காரர் அனைவரையும் வீட்டுக்குள் வைத்துப்பூட்டி விட்டு சிறுமி ஒருவரைத் தூக்கிச் சென்று நகைகள் இருக்கும் இடத்தினைக் காட்டும்படி மிரட்டியுள்ளனர்.

இதற்காக *(16ஆம் பக்கம் பார்க்க)*

## ரி.ஆர்.ஓவை சேர்ந்த ஐவருக்கு பிடியாணை

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாகதமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதிகளை வழங்கினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐந்து பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

நிதி முறைகேட்டு சட்டத்தின் கீழ் இவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற *(16ஆம் பக்கம் பார்க்க)*

## விடுதலைப் புலிகளை அழிக்க இந்தியாவிற்கு உதவ முடியும்

### இலங்கை அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

இந்தியாவில் விடுதலைப்புலிகளின் ஆபத்து அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டை இல்லாதொழிக்க இந்தியா, இலங்கையிடம் உதவி கோருமாயின் அதுகுறித்து கவனம் செலுத்த தயார் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## வெள்ளைக்கொடி விவகார வழக்கு

## செம்மைப்படுத்தப்பட்ட வீடியோவை ஏற்பதற்கு நீதிமன்றம் தீர்மானம்!

(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவுக்கு எதிரான வழக்கில் வீடியோ மூலப் பிரதி இன்றி செம்மையாக்கப்பட்ட சாட்சியை ஏற்றுக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

இறுதி யுத்தத்தின் போது வெள்ளைக்கொடியுடன் சரணடையச் சென்ற புலிகள் இயக்க உறுப்பினர்களை படையினர் சுட்டுக்கொன்றதாக சரத் பொன்சேகா தெரிவித்ததாக கூறப்பட்டமைக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரத்தினபுரி பகுதியில் சரத் பொன்சேகா இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தாக கூறியே அந்த வீடியோ காட்சியை நீதிமன் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## படையினரின் பாவனையிலுள்ள வீடுகள் விரைவில் கையளிக்கப்படும்

### யாழ். கட்டளைத் தளபதி உறுதி



(யாழ்ப்பாணம்)

படையினரின் பாவனையில் இருந்துவருகின்ற வீடுகள் உரியவர்களிடம் மிகவிரைவில் கையளிக்கப்படும் என யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் சமாதானத்திற்காக உயர்ந்த விருதைப் பெற்றுக்கொண்டமைக்காக யாழ்.கட்டளைத் தளபதியைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.கத்தோலிக்க அச்சக மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். *(16ஆம் பக்கம் பார்க்க)*

NIBM BUILDING COMPETENCIES



ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்

நாட்டின் நம்பிக்கை வாய்ந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்

- மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
- கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன!
முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

NIBM BUILDING COMPETENCIES Jaffna யாழ்ப்பாணம்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறவுண்ஸ் நிறுவனத்தின் யாழ்.கிளை திறப்புவிழா நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் அலுவலகம் திறந்து வைக்கப்படுவதையும் பிறவுண்ஸ் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.


## வேலை ஆட்கள் தேவை

சப்ளையர்ஸ்,காசாளர், பில் கிளாக் தேவை (ஆண், பெண் இருபாலரும்) உடனடியாக கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- தங்குமிட வசதி,மூன்று நேர உணவு வழங்கப்படும்.

தொடர்புக்கு
T.P : 0777917753
(சி-1834)

## தவறிவிட்டது

சந்திரலிங்கம் தயாளன் என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ் ரக்ஸ், ATM காட் என்பன அடங்கிய பேர்ஸ் சாவல்கட்டுக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு :
சாவல்கட்டு,ஆனைக்கோட்டை
T.P : 0770204933
(3255)





## கலைவிழா

கொக்குவில் சரஸ்வதி முன்பள்ளியின் கலைவிழா இன்று காலை 10 மணிக்கு கொக்குவில் நாமகள் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாதர் சங்க தலைவி திருமதி ர.கோமதி தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.நிமலதாஸன் கலந்து கொள்கிறார். (சு-5)

## சாயி நிலையத்தில் கிறிஸ்மஸ் விழா

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் கிறிஸ்மஸ் விழா 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிமுதல் ஆரம்பமாகி மாலை 6 மணியுடன் நிறைவடையும். இவ்விழாவில் நத்தார் கீதங்கள், சிறப்புச் சொற்பொழிவு, பாலவிகாஸ் மாணவர்களின் நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும்.(சு)

## இரத்தினக்கல் குழி இடிந்து 6 பேர் படுகாயம்

கிரிந்த, புஹுல்வெல்ல பகுதியில் இரத்தினக்கல் அகழ்வுக் குழியொன்று நேற்று மாலை இடிந்ததால் அங்கு பணியாற்றிய 6 பேர் மண்ணில் புதையுண்ட நிலையில் காயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மற்றொருவர் காணாமற் போயுள்ளதால் அவரை மீட்பதற்கான நடவடிக்கைகள் தொடர்கின்றன.

30 அடி ஆழமான இக்குழியில் 7 இளைஞர்கள் மீதும் 5 அடி உயரத்திற்கு மண் இடிந்து வீழ்ந்தது. 4 மணித்தியாலங்களின் பின்னர் பொலிஸாரால் இவர்கள் மீட்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் ஒருவர் மேற்படி இரத்தினக்கல் அகழ்வுக் குழியின் உரிமையாளரான கிருஷான் ஜீவக ஜயருக் எனத் தெரிவிக்கப்பட்டது. (சு-5)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

14/1 அம்மன் வீதி கந்தர் மடத்தில் (4) நாலு அறையுடன் கூடிய (4) பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
(சிறி)0750472976
(ராசன்) 0772718436
(3251)


# இந்தியா - இலங்கைக்கிடையில் கப்பல் சேவை ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கடற்பயணத்தை மேற்கொள்வதற்கான கப்பல் சேவை ஒப்பந்தமொன்று இரு நாடுகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று அரசாங்கம் நேற்று அறிவித்தது.

அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தக் கப்பல் சேவைக்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் அதன் ஆரம்ப கட்டமாக தலை மன்னாருக்கும் ராமேஸ்வரத்திற்கும் இடையிலும் கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலும் இந்தக் கப்பல் சேவை அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் ஏனைய துறைமுகங்களிலிருந்து இந்தியாவுக்கான கப்பல் சேவையை வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஊடகத் துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக சேவையினை முன்னெடுக்கும் வர்த்தகங்கள் மற்றும் உல்லாசப் பயணிகள், பக்தர்கள், மாணவர்கள் ஆகியோரின் நலன் கருதியே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர்களினால் (சு-5)


## 3 ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம்
18
08
1956

மறைவு
19
09
2010



அமரர் சந்திரசேகரம் பவானிதேவி

அன்னமே எம் அமுதே - எமை
அரவணைக்கும் எம் உயிரே!
எண்ணாமே எண்ணிடா - வேளைதனில்
எட்டா நீர் சென்றதெங்கே!
உன்னை நாம் உணவெடுத்தால் - நீர்
முன்னம் எமக் கூட்டியதே எண்ணத்தில்
தோன்றுதம்மா

வண்ணமே சிரிப்பதனில் - எமை
அரவணைக்கும் தெய்வமெங்கே?
கண்ணில் நீர் வடிந்தோடி - எம்
கன்னமே நனைகிறது
நித்தம் நாம் உம் நினைவில் - தினம்
நிர்க்கதி ஆகிடுறோம்
தவித்திடும் எமை அணைக்க - நீர்
மறுபடி வர மாட்டீரோ...?

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

(சி-1840)

Sale Sale Sale...



## மாபெரும் மலிவு விற்பனை

லைடன் புடவை நிலையம்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க கிறிஸ்மஸ், புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

01.12.2010 முதல் 01.01.2011 வரை சகல விதமான ரெடிமேட் ஆடைகள் ஆண், பெண் இருபாலருக்கும் ஏற்ற பாடசாலை சீருடை துணி வகைகள் என்பவற்றை விசேட கழிவு விலையில் மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.

எதிர்வரும் 19, 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடை திறந்திருக்கும்

லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி (பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல : 021 222 2381

(சி-1836)

## சேவை நலன் பாராட்டு



திரு. காசிப்பிள்ளை குலசேகரம்
B.A., Dip.in Ed., M.Ed.
(ஆசிரிய ஆலோசகர் - யாழ் கல்வி வலயம்)

**சேவை விபரம்**

26.12.1985 - 28.02.1995 - கிளி/பூநகரி ம.வி - ஆசிரியர், பிரதியதிபர், பதில் கொத்தணி அதிபர்,பதில் அதிபர்

01.03.1995 - 22.09.1999 - யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம் - சமூகக்கல்வி ஆசிரியர்

23.09.1999 - 15.12.2010 யாழ்ப்பாணக் கல்வி வலயம் ஆசிரிய ஆலோசகர், வாழ்க்கைத் தேர்ச்சிகள், சமூக விஞ்ஞான பாடங்கள், க.பொ.த (உ/த) புவியியல் வளவாளர்

25 வருடங்கள் சிறப்பாகப் பணியாற்றி 16.12.2010 அன்று சேவையில் இருந்து ஓய்வுபெறும் எங்கள் நண்பரைப் பாராட்டி அவரின் ஓய்வுக்காலம் குடும்பத்தவருடன் மகிழ்ச்சியாக அமைய வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய ஆலோசகர் குழுமம்,
யாழ். கல்வி வலயம்.

(3256)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பெரியோர் துணை

'வீட்டிலிருக்கும் பெரியவர்களின் அறிவுரைகளைக்கேள். அவர்கள் சொல்வது போன்று நடந்து கொள்' என்று ஒரு இளைஞனுக்கு புத்திமதி கூறினேன்.

அதற்கு அவன் "அட போங்க சேர், அவர்களெல்லாம் அந்தக்காலத்து ஆட்கள். இந்தக் காலத்தைப்பற்றி அவர்களுக்கென்ன தெரியும்?" என்றான்.

அதன்பின் அவனை விடாப்பிடியாக உட்கார வைத்து நான் கேள்விப்பட்ட ஒரு கதையை அவனிடம் சொன்னேன்.

பாரசீக மன்னன் ஒருவன் தன்னுடைய பரிவாரங்களுடன் இளைஞர்களையும் அழைத்துக் கொண்டு இஸ்தான்பூர்லேயிருந்து சுப்பர் நாகூம் பட்டினத்துக்குப் புறப்பட்டானாம். மொத்தம் 7 நாட்கள் பாலை வனத்தில் பயணம் செய்து அங்கே போய் சேர வேண்டுமாம்.

சரி,அங்கு அப்படியென்ன விஷேசம்?

அந்தப் பாரசீக மன்னனுடைய தாத்தாவைப் புதைத்த இடம் அந்த ஊரில் இருக்கிறதாம். தாத்தா இறந்த நூறாவது நாள் நினைவுச்சடங்கை அந்த ஊரில் போய் நடத்த திட்டமிட்டிருந்தார்களாம்.

பாலைவனப் பகுதி என்பதால் இளைஞர்கள் மட்டும்தான் அந்தப் பயணத்தில் பங்கெடுக்க வேண்டும். வயதானவர்களெல்லாம் வரக்கூடாதென்பது மன்னனுடைய கடும் உத்தரவு.

அதனால் மன்னன் தன்னுடைய பரிவாரங்களையும் இளைஞர்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். ஒரு நாள் பிரயாணம் முடிவதற்குள் பாலைவனப்புயல் பயங்கரமாக வீச ஆரம்பித்தது.

ஒட்டகங்களெல்லாம் திசைமாறிப் போய் விட்டது. மன்னனும் சிலரும் வழிமாறிப் போய்விட்டார்கள். யார்யார் எங்கிருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. தண்ணீர் தாகமெடுத்தது. மன்னனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தண்ணீரில்லாமல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஓர் இளைஞன் வந்து,"மன்னா தண்ணீர் இருக்கும் இடத்தை நான் சொல்கிறேன். இங்கிருந்து தென்கிழக்கு திசையில் இரண்டுகல் தொலைவில் தண்ணீர் கிடைக்கும்"என்றான்.

அவனுடைய பேச்சை நம்பி அவன் சொன்ன திசையில் குறிப்பிட்ட தூரம் போய்ப் பார்த்தார்கள். பார்த்தால்... அவன் சொன்னது போன்றே அங்கே தண்ணீர் இருந்தது. மன்னனுக்கு மிகவும் ஆச்சரியம்!

"இங்கே தண்ணீர் இருக்கிறது என்று உனக்கு எப்படித் தெரியும்?"என்று அந்த இளைஞனைப் பார்த்துக் கேட்டார்.

"மன்னா... என்னை மன்னிப்பதாக இருந்தால் நான் ஒரு உண்மையைச் சொல்லி விடுகிறேன். நான் ஒரு தவறு செய்து விட்டேன்"என்றான்.

"நீ எந்தத் தவறும் பண்ணியிருக்க மாட்டாய். எங்களுக்கெல்லாம் தண்ணீர் கொடுத்து உயிரைக் காப்பாற்றியிருக்கிறாய். உன்னை ஒன்றும் செய்யமாட்டேன் சொல்"என்றார் ராஜா. இளைஞன் மெதுவாக உண்மையைச் சொன்னான்.

"அதுவந்து மன்னா... என்னுடைய தந்தை உங்கள் தாத்தாவின் நினைவுநாள் வைபவத்தில் கலந்துகொள்ள வரப் போகிறேன் என்று அடம்பிடித்தார். நான் மறுத்தேன்.

வயதானவர்கள் அங்கு வரக்கூடாதென்பது ராஜாவின் உத்தரவு என்று சொன்னேன். அவர் கேட்கவில்லை. அடம்பிடித்தார். அதனால் அவரை ஒரு சாக்குப் பையில் போட்டுக் கட்டி ஒட்டகத்தின் மேல் சாப்பாட்டு மூட்டைகளோடு சேர்த்து வைத்து விட்டேன். தண்ணீருக்கு கஷ்டம் வந்தபோது அவரிடம் சொன்னேன். அவர்தான் சாக்குப் பையில் ஒரு ஓட்டைபோடு என்றார். போட்டேன். அதன் வழியாகப் பார்த்து விட்டுத் தான் தண்ணீர் இருக்குமிடத்தைக் கூறினார். அதையெப்படிக் கண்டு பிடித்தீர்கள் என்று கேட்டேன். மாலை நேரத்தில் சிச்சிலிப் பறவைகள் தண்ணீர் குடித்து விட்டுத்தான் தூங்கும். நான் சாக்குத் துவாரம் வழியாகப் பார்த்த போது தென்கிழக்குத் திசையிலிருந்து அந்தப் பறவைகள் பறந்து வந்தது தெரிந்தது. அதனால்தான் அங்கே தண்ணீர் இருக்கும் என்று சொன்னேன் என்றார்."என்று சொன்னான்.

மன்னன் உடனே அந்தப் பெரியவரை சாக்குப் பையிலிருந்து விடுவித்தான்.

"பெரியவர்கள் எப்பொழுதுமே அனுபவசாலிகள். அவர்களுடைய துணையின்றி பிரயாணம் செய்வது தவறென்பதை புரிந்து கொண்டேன். நல்லவேளை! இந்தப் பெரியவர் இப்பொழுது நம்முடன் இருக்கிறார். இனி இவர்தான் எனக்கு அமைச்சர்"என்றான்.

நினைவுநாளை எல்லோரும் சிறப்பாகக் கொண்டாடி விட்டு நாடு திரும்பினார்களாம். இந்தக் கதையை சொல்லிவிட்டு அனுபவம் வாய்ந்த முதியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவர்களுடைய பேச்சைக் கேட்க வேண்டும் என்று எனக்கு எதிரில் அமர்ந்திருந்த இளைஞனுக்குப் புத்திமதி சொன்னேன்.

"சரி சேர் இவ்வளவு தூரம் சொல்கிறீர்கள். ஏற்கனவே ஒரு பெரியவர் சொன்ன புத்திமதியைக் கேட்டுத்தான் நான் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்"என்றான் அவன்.

"அவர் என்ன புத்திமதி சொன்னார்?"என்றேன்.

"உங்களிடம் வந்து புத்திமதி கேட்கச் சொன்னார் சேர். அதனுடைய பலன்தான் 5 நிமிட அவஸ்தை"என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பூநகரி இராணுவமுகாமின் முதலாமாண்டு நிறைவை முன்னிட்டு விசேட வைபவங்கள்

(பூநகரி)

பூநகரி நகர்ப் பகுதியில் பரந்தன் வீதியில் அமைந்துள்ள 66 ஆவது படைப்பிரிவின் இராணுவ முகாமின் முதலாம் ஆண்டு நிறை வையொட்டி பல விசேட வைபவங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு படைத்தளபதி தலைமையில் கடந்த 15ஆம் திகதி காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நள்ளிரவு ஒரு மணி வரை நடைபெற்றது.

பூநகரி கோட்டை மைதானத்தில் அமைக்கப்பட்ட விசேட அரங்கின் தென்னிலங்கையில் இருந்து வரவழைக்கப்பட்ட பல இன்னிசைக் குழுக்களின் இசைக்கச்சேரி இரு மொழிகளிலும் நடைபெற்றது.

இதில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டார்கள். வட பகுதியின் பல இராணுவ முகாம் தளபதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டதோடு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கு முதல் நாள் மாலை தொடக்கம் அதிகாலை வரை பிரித்தோதும் நிகழ்வு இடம்பெற்றது. (ஸ்ரீ-3-84)

# திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது

கடந்த மாதம் 23ஆம் திகதி மற்றும் இம்மாதம் 14ஆம் திகதிகளில் கைதடி வடக்கிலுள்ள இருவேறு வீடுகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து இந்நபர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரு வீடுகளுக்கு அருகில் இருந்த நபரே கைது செய்யப்பட்ட நபர் எனவும் அத்தோடு அங்கு நடைபெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களுடன் இவருக்கு தொடர்பு இருக்கலாம் எனத் தெரிய வருகின்றது. (ஸ்ரீ-4)

# உயர்தரப் பரீட்சை முடிவுகள் மீளாய்வுக்கு 21 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்

வெளியிடப்பட்டுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்ய எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை மூலம் தோற்றிய மாணவர்கள் அந்தப் பாடசாலைகள் மூலம் விண்ணப்பிக்க முடியும் எனவும் தனிப்பட்ட மாணவர்கள் பரீட்சைகள் திணைக்களத்துக்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 2 இலட்சத்து30 ஆயிரத்து 237 மாணவர்களில் 19 ஆயிரத்து 788 பேர் மூன்று பாடங்களில் தேர்ச்சி பெறவில்லை.

இதேவேளை ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 381 மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 100 | 150 |
| உருளைக்கிழங்கு | 70 | 100 | 70 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 200 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 80 | 100 | 90 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 110 | 120 | 100 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 180 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 140 |
| பாகற்காய் | 200 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 70 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 |
| லீக்ஸ் | 100 | 140 | 100 |
| பீற்றூட் | 90 | -- | 100 |
| கறிமிளகாய் | 200 | -- | 200 |
| முருங்கைக்காய் | 250 | -- | 180 |
| போஞ்சி | 140 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 160 | 110 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 100 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 45 |

# தமிழர் புனர்வாழ்வுக்கழக அதிகாரிகளுக்கு பிடியாணை

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முக்கிய அதிகாரிகள் மூவருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் விடுத்த வேண்டுகோளை ஏற்றே இந்த பிடியாணையை உயர் நீதி மன்றம் நேற்று பிறப்பித்தது.

இதன் வழக்கு விசாரணைகள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# இராசி பலன்

*17.12.2010*
*(மார்கழி 02, வெள்ளிக்கிழமை)*
*ஏகாதசி பிற்பகல் 1.44 மணிவரை*
*அச்சுவினி பிற்பகல் 2.15 மணிவரை*
*இராகுகாலம் 10.52-12.22 மணிவரை*
*சுபநேரம் 6.22-7.52 மணிவரை*
*சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம், முகரம் பண்டிகை, அமிர்தசித்தம்*

**மேடம்** ஆலய வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், குடும்பத்தினர் உங்கள் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் அதில் ஏதாவது குறை கேட்க நேரிடலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், எதிலும் வேகத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்படுவது நல்லது.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு ஏற்படலாம், கௌரவமான நிலையுண்டு, பிரயாணத்திற்கு போட்ட திட்டம் நிறைவேறலாம், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம்.

**கடகம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கிடைக்கும், அதிகாரத்துடன் செயற்படுவீர்கள், இனிய தகவல்கள் வந்து சேரலாம்

**சிங்கம்** மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், உறவினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பிரயாண நன்மையுண்டு.

**கன்னி** சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், அலைச்சல்கள் அதிகரிக்கும், உறவினரிடையே நியாயமாக நடந்தாலும் குறைகேற்க நேரிடலாம்.

**துலாம்** உறவினர் வருகையால் உற்சாகமடையும் நாள், ஆலய தரிசனம் அமைதியைத் தரும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தியளிக்கும்.

**விருச்சிகம்** சொத்துக்களால் ஆதாயம் ஏற்படலாம், உறவினர்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வர், பகைவர்கள் உங்களுக்கு சாதகமாக விளங்குவர்.

**தனுசு** மாமன், மைத்துனர் வழியில் ஆதரவு பெருகும், வெளியுலகத் தொடர்புகள் அதிகரிக்கும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புத்திரர் வழி நன்மையுண்டு.

**மகரம்** உறவினர் உங்கள் முன்னேற்றத்திற்கு ஆதரவுக்கரம் நீட்டுவர், பெற்றோர் மீது அதிக அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**கும்பம்** தொழிலில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், உடன் பிறப்புக்களின் குணத்தை அறிந்து நடந்து கொள்வீர்கள், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மீனம்** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தனவரவு திருப்திகரமாக அமையும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையமும் சிவன் முன்பள்ளியும் இணைந்து நடாத்திய கலை விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கதிரமலைச் சிவன் தேவஸ்தான முத்தமிழ் குருமணி நா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவதையும் அருகில் தலைவர் செ.சிவநடராஜா, பிரதம விருந்தினரான பொறியியலாளர் கா. லிங்கேசன், உப தலைவர் க. கருணைநாயகம் ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## க.பொ.த.உயர்தரப்பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

யா/ அத்தியார் இந்துக் கல்லூரி

க.மீரா - 2ஏ, பி, செ. சிறீகாந்தன் - ஏ,பி,சி,ப.பவிதாஸ் -2பி,சி, சா.பிரபாகர்- 2பி,சி, க.கஜீபன்-பி,2சி, பா.சிவதர்சன்-பி, 2சி, த.தர்மருபன்-ஏ,சி,எஸ், வி.கார்த்திகா - 2பி, எஸ், ச.லக்சுமிப்பிரியா-2பி, எஸ், கு.தமிழினி- ஏ,சி,எஸ், யோ.தீபா- ஏ,பி, எஸ், ந.உஷாந்தினி -பி,2சி, க.வாகினி-பி,2சி, க.கபிலன்-பி,2சி. (ஸ்ரீ-3)

## “மகிழ்வுடன் வாழ்வோம்” சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு

(கொழும்புத்துறை)

யாழ்பாணம் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற உள சமூக மேம்பாட்டு செயற்றிட்டத்தின் கீழ் மகிழ்வுடன் வாழ்தல் என்னும் சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை யாழ்ப்பாணம் அகவொளி நிலையத்தில் கியூடெக் இயக்குநர் அருட்தந்தை பேனாட் றெக்னோ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மகிழ்வுடன் வாழ்வோம் என்ற கருப்பொருளில் மருத்துவர் எஸ். குகதாஸ் மற்றும் கியூடெக் நிறுவனத்தைச் சேர்ந்த செ.ஜோசப் பாலா , எம்.பத்மகேசரி ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

இதற்கு தீவகம் , பருத்தித்துறை , மருதங்கேணி , தெல்லிப்பழை , நல்லூர் , சாவகச்சேரி , யாழ்ப்பாணம் போன்ற கிராமசேவகர் பிரிவுகளிலிருந்து மக்கள் கலந்துகொள்வதுடன் உள சமூக செயற்பாடு தொடர்பான கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

## கைலாசபதி நினைவரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் கைலாசபதி நினைவரங்கு எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.ஆரியகுளம் புதிய உயர் கலைக்கல்லூரியில் இலங்கை வங்கியின் சங்கானைக்கிளை முகாமையாளர் அழ.பகீரதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில நினைவுரையை யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் தாயகம் சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-2)

## வீதி புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தம்

(கொழும்புத்துறை)

நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி வங்கியால் புனரமைக்கப்பட்ட கோண்டாவில் குளக்கரை வீதி வேலைகள் இடையில் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வீதி திருத்தப்படாத பகுதிகளில் உள்ள மக்கள் தமது காணிகளை விட்டுக்கொடுக்காது இருப்பதால் வீதியை அகலித்து புனரமைக்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குளக்கரை வீதியை முழுதும் புனரமைப்பதற்கு அப்பகுதி மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-51)

## கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட 4 முக்கிய வீதிகள் புனரமைப்பு

கரவெட்டி ஆசிரிய அபிவிருத்தி வங்கியின் உதவிக் கடன் திட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட நான்கு முக்கிய வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச சபைச் செயலர் வி. குலநாயகம் தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசத்திற்குட்பட்ட நான்கு வீதிகள் சுமார் நான்கு கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதில் உடுப்பிட்டி-வல்லை வீதி, தலையாட்டி-முள்ளிவீதி, வன்னிச்சியம்மன் கோவிலடி-கம்பர் மலைவீதி, துன்னாலை தாமரைக்குளம்-ஞானசாரியார் வீதி ஆகிய நான்கு வீதிகளே இவ் வாறு புனரமைக்கப்படவுள்ளது.

குறித்த வீதிகள் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் குன்றும் குழியுமாக காணப்படுவதோடு போக்குவரத்துக்கு மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-24)

## அவை காற்று செய்முறை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையினால், நடாத்தப்படும் “ அவை காற்று” செய்முறை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 20ஆம் திகதி திங்கட்கிழமை வரை காலை 8.30 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறுமென வட இலங்கை சங்கீத சபைத்தலைவர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கரவெட்டி பிரதேசங்களில் முக்கிய அபிவிருத்தி திட்டங்கள்

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இதில் கரவெட்டி பிரதேசங்களில் இடம்பெறவுள்ள அபிவிருத்திகளில் நீர்ப்பாசனத் திணைக்களம், வீதி அதிகாரசபை, வீதி அதிகார திணைக்களம், தேசிய நீர் வடிகால் சபை, பிரதேச சபை, கமநலத் திணைக்களம், பிரதேச செயலகம் போன்றவற்றூடாக இவ் அபிவிருத்திகள் இடம்பெறவுள்ளது என்றும் அக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-24)

## திருட்டு முயற்சியொன்று பொதுமக்களால் முறியடிப்பு

(பொலிகண்டி)

வல்வெட்டிப் பகுதியில் நடைபெற்ற திருட்டு முயற்சி ஒன்று பொதுமக்களால் முறியடிக்கப்பட்டது.

இதுபற்றி தெரியவருவதாவது,

கடந்த 15ஆம் திகதி புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த சுந்தரம் புவனேஸ்வரன் என்பவரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் வீட்டின் வெளிப்பகுதியில் எரிந்து கொண்டிருந்த மின்குமிழை உடைத்துவிட்டு திருடுவதற்கு முயற்சித்துள்ளனர்.

இச் சத்தத்தைக் கேட்டு உடனே விழித்தெழுந்த வீட்டுக்காரர்கள் கூக்குரலிட்டுள்ளனர்.

மறுகணம் அயலில் உள்ள இளைஞர்கள் ஒன்றுகூடி திருடர்களை பிடிக்க முற்பட்ட போது திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.

இது தொடர்பாக உடன் வல்வெட்டித் துறைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இதற்கு முன்னர் இப்பகுதியில் வீட்டில் இருந்தவர்களை கூரிய ஆயுதங்களால் வெட்டி கொள்ளையிடப்பட்ட சம்பவமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-48)

யாழ்.செய்திகள்

## சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

(கரவெட்டி)

காங்கேசன்துறைக்குட்பட்ட பொலிஸ் பிரிவுகளில் இடம்பெறும் குற்றச் செயலைத் தடுப்பதற்கான சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டிப் பிரதேசசபை பொதுமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 8 பொலிஸ் நிலையங்களில் இருந்தும் பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் வடமராட்சி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பிரதேச சபைச் செயலர் வி. குலநாயகம் மற்றும் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-24)

## மதுப்பிரியர்களின் அட்டகாசத்தால் பாதிக்கப்படும் விவசாயிகள்

(கொழும்புத்துறை)

தாவடிச் சந்திப் பகுதியில் உள்ள நந்தாவில் தோட்டக் காணிகளில் மதுப்பிரியர்களின் அட்டகாசத்தால் அப்பகுதி விவசாயிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக மது அருந்திவிட்டு பயிர்களை நாசம் செய்வதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களில் எஞ்சியுள்ளவற்றில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

## விடுவிக்கப்படாத பிரதேசங்களில் வீட்டுத் தளபாடங்கள் திருட்டு

(கொழும்புத்துறை)

அரியாலையில் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் உள்ள வீட்டுத் தளபாடங்கள், கட்டப் பொருட்கள் என்பன சிலரால் களவாடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பூம்புகார் கிராமத்தில் இருந்து இப் பொருட்கள் களவாடப்பட்டு வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிப்பதோடு இதனைத் தடுக்க உரியவர்கள் கவனமெடுக்க வேண்டுமென அவர்கள் கோரியுள்ளனர். (ஸ்ரீ-3-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரப் பயிற்சி சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனத்தினால் இவ்வாண்டு நடத்தப்பட்ட சித்திரப் பயிற்சி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சான்றிதழைப் பெறும் மாணவர்கள் நிறுவனத்துக்கு நேரடியாக சமுகம்தந்து சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை www.Iatart.webs.com எனும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் நிர்வாக இயக்குநர் தெரிவித்தார். (ஸ்ரீ-9)

# பிராந்திய ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க புலிகள் மேற்கொண்ட முயற்சி முறியடிப்பு

## தாய்லாந்தில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு


(கொழும்பு)

பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட முயற்சிகளை அரசாங்கம் முறியடித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தம் காரணமாக பிராந்திய வலயத்தின் ஸ்திரத்தன்மைக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறொனினும் இலங்கை அரசாங்கத்தின் புத்திசாதுரியமான நடவடிக்கைகளினால் பிராந்திய வலயத்தில் புலிப் பயங்கரவாதம் வியாபித்தல் தடுக்கப்பட்டதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



வன்முறைச் சம்பவங்கள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பாக ஆசிய பிராந்திய வலய நாடுகளின் கொள்கைகளில் மாற்றம் அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நீண்ட கால யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டபோதிலும் சில நாடுகளில் சிறு சிறு ஆயுதக் குழுக்கள் உருவாகக்கூடிய நிலை காணப்படுவதாகவும் இலங்கையில் அவ்வாறான நிலைமை ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்புக்கள் தனித்து இயங்கவில்லை எனவும் ஏனைய பல அமைப்புக்களுடன் இணைந்து பயங்கரவாதிகள் செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த பெரும் தொகையான மக்கள் ஏற்கனவே மீள் குடியேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


ASIAN UNIVERSITY FOR WOMEN

The Asian University for Women, located in Chittagong, Bangladesh, is a new and unique institution of higher learning offering an innovative curriculum combining the best of the liberal arts tradition with professional training. The Office of Admissions at AUW seeks promising, talented and dynamic students from South and South East Asia who aim to make a difference.

**Eligibility Criteria**

- Be a female between the ages of 17-25 years
- Have completed GCE Advanced Level
- Have demonstrated leadership potential, commitment, and the ability to work for positive social change
- Have secured an average of 60% or equivalent grades in her final examinations with a minimum score of 60% English and Mathematics in her GCE Ordinary Level Examination.

Applicants will be evaluated for admission based on the entrance exam, personal interview, academic achievement, community commitment and leadership intent.

While all applicants are initially considered for the undergraduate program, if a promising applicant's performance on the entrance exam shows the need for additional academic preparation, she will be admitted to the Access Academy. Access Academy Programme is One year pre-university program which is designed to build and develop the requisite English, Mathematics, and Computer skills in young women so that they are adequately prepared for AUW's Undergraduate program.

AUW offers Bachelor of Arts (BA) or Bachelor of Sciences (BS) degrees in the following Concentrations

1. Politics, Philosophy and Economics
2. Environmental Sciences
3. Public Health Studies
4. Biological Sciences
5. Asian Studies

In the next several years, the AUW plans to introduce new majors in the social sciences, including sociology, psychology, and anthropology.

AUW is on track to be accredited by the New England Association of universities & colleges, who also accredits Harvard and many other major universities in the United States and around the world.

AUW prepares the students to apply and compete for scholarships to the best graduate programs around the world, including masters and doctoral programs in the social sciences, sciences, humanities, public policy, international relations, and journalism, as well as professional programs in Public Health (MPH), and Medicine (M.D) if students choose either Public Health Studies or Biology as their majors. In addition the AUW prepares students for the study of business and management (M.B.A.) and law at the graduate level.

**Application forms may be obtained from the recruitment coordinator**
**Prof.A.Navaratnarajah**
Consultant/Director
Sewa Lanka Tertiary Education Programme
Sewa Lanka Foundation
432 A, Colombo Road,
Boralesgamuwa
Tel: 0113166334,0113166335 Mobile: 0777739261
Fax: 0112516240Email:anavaloga22@gmail.com

**For more information**
**Sewalanka Foundation**
**Sewa Illam**
**54/2, Palaly Road**
**kondavil**
**Tel: 0212228361**
**021 2229850**
**021 7451760**
**021 7451761**
**Fax: 021 2229850**

**For more information/ forms: http://asian-university.org**
**Applications are due on 28th of February 2011**

*We encourage you to consider the Asian University for Women for your higher studies and discover your potential at this exciting new educational institution!*


## மின்தடைபற்றிய அறிவித்தல்

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்துமாலை 5 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப்பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப்பகுதி ஆகிய பிரதேசங்களுக்கான மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும் வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னதாக மின்விநியோகம் வழங்கப்படலாம் எனவும் இலங்கைமின்சார சபையின் யாழ். பிரதேசமின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## இரசாயனவியல் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு 'ஏ' நடாத்தும் "இரசாயனவியல் ஆசிரியர்களுக்கான ஆய்வுகூட பரிசோதனைகள்" பற்றிய பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் துறையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சிப்பட்டறைக்கு தமது பாடசாலை அதிபர்களினூடாக விண்ணப்பங்களை அனுப்பிய இரசாயனவியல் ஆசிரியர்களை நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு முன்னர் சமு கமளிக்குமாறு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு 'ஏ' செயலாளர் கலாநிதி கு. வேலாயுதமூர்த்தி கேட்டுக்கொள்கின்றார். (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யா/வண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ் தானத்தில் இடம் பெற்ற பிள்ளையார் கதை விரத இலட்சார்ச்சனை பூர்த்தி யின் போது மகா கணபதி ஹோமம் இடம் பெறுவதையும் சுவாமி வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- வி.பிரணவன்)

## ஒளிவிழா நிகழ்வு

(கொழும்புத்துறை)

நல்லூர் பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-51)

## டிசெம்பர் 21 முதல் கொழும்பில் பாதுகாப்பு கமராக்கள் இயக்கம்

(கொழும்பு)

நாடு முழுவதும் பாதுகாப்பு கமராக்களைப் பொருத்தும் திட்டத்தின் கொழும்பு மாநகருக்கான நடவடிக்கை டிசெம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு கொண்டுவரப்படுகிறது.

அதன்படி கொழும்பு உட்பட நாடு முழுவதிலும் உள்ள நகரங்களில் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட உள்ளன.

பாதாள உலகக் குற்றவாளிகள், திருட்டுக் கும்பல் , கப்பம் பெறுவோர் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் ஆகியோரை மடக்கிப் பிடிப்பதற்கு ஏற்ற வகையில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படுகிறது.

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் இந்த முறைமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கிணங்க இலங்கையிலும் கையாளப்படவுள்ளது.

தற்போது கொழும்பு நகரிலும் அதை அண்டிய பிரதேசங்களிலும் பொருத்தப்பட்டுள்ள கமராக்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு உத்தியோகபூர்வமாக இயக்குவதற்கு ஏற்ற வகையில் ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்தப் பாதுகாப்பு கமரா பொருத்தும் திட்டம் இதற்கு பல வருடங்களுக்கு முன்னர் முன்மொழியப்பட்ட போதிலும் அதற்காக செலவாகும் தொகை அதிகமாகக் காணப்பட்டமையால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எனினும் பல்வேறு குற்றச் செயல்களை செய்துவிட்டு தப்பிச் செல்லும் குற்றவாளிகளை பிடிப்பதற்காகவும் நாட்டிலே குற்றச் செயல்கள் இடம்பெறுவதை முற்றாக தடுப்பதற்காகவும் பாதுகாப்பு கமரா பொருத்தப்பட வேண்டுமென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வலியுறுத்துகின்றார்.

சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற எச்.எஸ்.பீ.சி. வங்கியில் 7 கோடி ரூபா கொள்ளை உட்பட நாட்டிலே நிகழ்ந்த பாரிய கொள்ளைகள் தொடர்பான சூத்திரதாரிகளை இதுவரையில் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதற்கான காரணம் பாதுகாப்பு துறையினரிடம் சிக்காது பல உபாயங்களை திருட்டுத்தனமாக பாவித்து செயற்படுவதாகும். எனினும் பாதுகாப்பு கமரா பொருத்தப்பட்டதன் பின்னர் நாள் முழுவதிலும் அனைத்து விடயங்களும் வீடியோவில் பதிவாகும்.

கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் திட்டமானது அடுத்த ஆண்டின் இறுதிக்குள் நாடு முழுவதிற்கும் விஸ்தரிக்கப்படும்.

இந்த பாதுகாப்பு கமரா பொருத்தப்பட்டதன் பின்னர் இதனை கண்காணிப்பதற்காக பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரை உள்ளடக்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

## அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவையின் ஏற்பாட்டில் முப்பெரும் விழா

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 23 ஆம் ஆண்டு நினைவுநாளும் அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவையின் முன்னாள் தலைவர் பொன் மதிமுகராஜாவின் 12 ஆம் ஆண்டும் நினைவு நாளும் சுனாமி அனர்த்தத்தின் 6ஆம் ஆண்டு நினைவு நாளும் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை முப்பெரும் விழாவாக நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வுகள் எதிர்வரும் 24ஆம் திகதி தாவடி வீதி கொக்குவில் தலைமைச் செயலகத்தில் எம்.ஜி.ஆர். சிலைக்கு மலர் மாலை அணிவிப்பதோடு ஆரம்பமாகும். தொடர்ந்து குருநகர், பாஷையூர் ஆகிய இடங்களில் இருக்கும் எம்.ஜி.ஆர். சிலைகளுக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வும் இடம்பெறும் என பேரவைத் தலைவர் எம். விஜயகாந் அறிவித்துள்ளார்.

மறுநாள் 25ஆம் திகதி நிகழ்வுகள் காலை 6 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்றலில் குருமாரின் ஆசியுடன் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் ஆண்களுக்கான 40 மைல் துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, பெண்களுக்கான 15 மைல் துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி, 25 வயதுக்குப்பட்ட ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டப் போட்டி, கழகங்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியும் 8 மைல் மூன்று சில்லு சைக்கிள் ஓட்டப்போட்டி என்பனவும் நடைபெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி தாவடி ஸ்ரீ அம்பலவாணர் தேவ விநாயகர் ஆலயத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு 3ஆம் நாள் இறுதி நிகழ்வு தலைவர் பொன் மதிமுகராஜா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுகளில் மங்கல இசை, தமிழ் மரபிசை நினைவுப் பேருரை, எம்.ஜி. ஆர். விருது வழங்குதல், கவியரங்கு, பட்டிமன்றம், கரகாட்டம், நாடகம், நடனம், வில்லிசை, மெல்லிசை, இசையமுதம், தமிழினச் சட்டமன்றில் விவாதம் என்பன நடைபெறும்.

இந் நிகழ்வுகளில் பங்குகொள்ள விரும்புகின்ற விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை தலைமைக் காரியாலயத்தில் பெற்று எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பதாக பொன். மதிமுகராஜா விஜயகாந், தலைவர், அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவை, தாவடி, கொக்குவில், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

## கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்திருக்கக்கூடும்

### அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் வடக்கு- கிழக்கில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்திருக்கக் கூடுமென இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கு தொல்பொருட்கள் மற்றும் பௌத்தமதம் தொடர்பில் சிலர் வெளியிடும் கருத்துக்கள் குழப்பதை ஏற்படுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் சிங்கள பௌத்தர்கள் மட்டும் வாழ்ந்ததாக கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதாகவும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கில் ஏன் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்திருக்க முடியாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

லாவோஸ் பௌத்தர்கள், வியட்நாம் பௌத்தர்கள் என பல்வேறு பௌத்த மக்கள் வாழ்ந்து வருவதாகவும் இவ்வாறான ஓர் பின்னணியில் ஏன் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்திருக்க முடியாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

உயர் தர பௌத்த பாடபுத்தக விநியோக நிகழ்வில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தனிப்பட்ட ஓர் இனத்தின் மதக் கலாசார விழுமியங்கள் தொடர்பில் மட்டும் பேசுவதனால் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த நூற்றாண்டில் உலகப் புரட்சிகளை ஏற்படுத்திய கார்ல் மார்க்ஸோ, அல்பர்ட் ஐன்ஸ்டீனோ மதம் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஏனைய மதங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியது மிகவும் அவசியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கை மீனவர்கள் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கைது

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் இருவர் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆறு பேரைக் கொண்ட மீனவர் குழுவொன்றை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கைது செய்ய முற்பட்ட போதிலும் அதில் நான்கு பேர் தப்பித்துள்ளதாக மீன்பிடி அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

தப்பித்த மீனவர்கள் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. லால் பெர்ணாண்டோ மற்றும் சுகத் பெர்ணாண்டோ ஆகிய மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேருவளை பிரதேசத்திலிருந்து கடந்த நவம்பர் 20 ஆம் திகதி கடலுக்கு சென்ற மீனவர்களே இவ்வாறு சோமாலிய கடற்கொளையர்களிடம் சிக்கியுள்ளனர். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் மற்றும் தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு புதிய சட்டங்கள்

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

பொதுமக்கள் மற்றும் தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு பல புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

டைனமைட் இறக்குமதி தனியார் பாதுகாப்பு நிறுவனங்களை நெறிப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வோட்டர் ஜெல் போன்ற ஆபத்து குறைந்த வெடிபொருள் பயன்பாடு ஊக்குவிக்கப்படவுள்ளதாகவும் டைனமைட் போன்ற வெடிபொருள் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

காலத்திற்கு ஏற்ற வகையில் வெடிபொருள் பயன்பாடு குறித்த சட்டங்களில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிப் பயன்பாடு குறித்தும் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதேவேளை குடிவரவு- குடியகல்வு சட்டங்கள் தொடர்பிலும் புதிய நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டாரநாயக்க விமான நிலையத்தின் நடவடிக்கைகள் நெறிப்படுத்தப்படவுள்ளதாகவும் கடவுச் சீட்டுக்களின் தரத்தை உயர்த்தப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. புதிய தேசிய அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சகல பிரதேச செயலகங்களினதும் அடிப்படைத்தரவுகள் கணனிமயப்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இடம்பெயர்ந்த மக்கள் தொண்டு நிறுவனங்களின் உதவிகளிலேயே அதிகம் தங்கியுள்ளனர்

## ஐ.நா.மனிதாபிமான விவகாரங்களுக்கான காரியாலயம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவிகளிலேயே அதிகமாக தங்கியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்புக்காரியாலயம் அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்து பல மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் பெருமளவிலான இடம்பெயர் மக்கள் சர்வதேச தொண்டு நிறுவனங்களிலேயே பெரிதும் தங்கியிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக அத்தியாவசிய உணவுத் தேவைகளுக்காக சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியை இடம்பெயர் மக்கள் இன்னமும் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நிதிப்பற்றாக்குறை காரணமாக தொடர்ச்சியாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகளை வழங்க முடியாத நிலைமை ஏற்படலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. 3இலட்சத்து 71ஆயிரம் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் இதற்கென 24 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் எனவும் உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

நிதிப் பற்றாக்குறையினால் அநேகமான தொண்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்க முடியாத நிலையை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.எதிர்வரும் மார்ச் மாதம் வரையிலும் உதவிகளை வழங்க முடியும் எனவும் தொடர்ச்சியாக நிவாரணங்களை வழங்குவதற்கு தொண்டு நிறுவனங்கள் உதவிகள் மிகவும் அவசியமானதெனவும் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.(ஸ்ரீ-2)

## க.பொ.த.சாதாரண பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்தவர் கைது

விமானப்படை முன்னாள் வீரர் ஒருவர் க.பொ.த. சாதாரணத்தரப் பரீட்சையில் ஆள்மாறாட்டம்செய்தகுற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றொரு நபருக்காக இவர் பரீட்சை எழுதியதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளார். வெயாங்கொடை ஜனாதிபதி மகாவித்தியாலய பரீட்சை நிலையத்தில் ஆங்கில மொழி வினாத்தாளுக்கு விடையளித்துக் கொண்டிருந்த போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-5)

# போர் முடிவுற்ற போதும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வில்லை

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)



தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுத் திட்டங்களை வழங்கத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

போர் நிறைவடைந்து ஒன்றை வருடங்களுக்கு மேல் கடந்துள்ள போதிலும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுத்திட்டங்களை முன் வைக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர் இடம்பெற்ற காலத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு எட்டு கூரைத்தகடுகளும் நான்கு தூண்களும் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்புச் செலவுகள் 13பில்லியன்களினால் உயர்த்தப்பட்டுள்ள போதிலும் சிறுபான்மை மக்கள் சரியான முறையில் கவனிக்கப்படாவிட்டால்,நாட்டின் நன் மதிப்பிற்கு களங்கம் ஏற்படும் எனவும் இவ் வாறான நடவடிக்கைகளினால் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகையையும் பாதிக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

18ஆவது திருத்தச் சட்ட மூல அமுலாக்கத்தினால் ஜனநாயகத்திற்கு கடுமையான சவால் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# திருமறைக் கலாமன்றத்தினால் 'அசோகா' நாடகம் மேடையேற்றம்

(யாழ்ப்பாம்)

திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் பாரத தேசத்தின் பிரமிப்புமிக்க பெருமன்னனான அசோகச் சக்கரவர்த்தியின் வரலாற்றினை கூறும் அசோகா என்னும் வார்த்தைகளற்ற நாடகம் நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு 286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

இலங்கையில் பல்வேறு பிராந்தியங்களிலும் இயங்கும் திருமறைக் கலாமன்றங்களை சேர்ந்த பல்லின இளைஞர்கள் பலரையும் இணைத்து இந்நாடகம் தயாரிக்கப்படுகின்றது.

1991ஆம் ஆண்டில் இருந்து தலைநகர் கொழும்பை மையப்படுத்தி அசோகா நாடகத்தை திருமறைக் கலாமன்றம் பல தடவைகள் மேடை ஏற்றி வந்துள்ளது.

யுத்தம் முனைப்புடன் நடைபெற்ற காலத்தில், யுத்தத்தின் குரூரத்தை பலருக்கும் வெளிப்படுத்த இந்நாடகத்தினை மேடை ஏற்றிய மன்றம்,இம்முறை அசோகச் சக்கரவர்த்தியின் யுத்தத்துக்குப் பின்னான ஆக்கச் செயற்பாடுகளையும் அகிம்சைச் செயற்பாடுகளையும் வலியுறுத்தும் படைப்பாக இதனைத் தயாரித்துள்ளது.

இந்நாடகம் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டதன் பின்னர் தொடர்ந்து 19ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்திலும் 20ஆம் திகதி மாலை 6 மணிக்கு கொழும்பில் பம்பலப் பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்திலும்மேடையேற்றப்படவுள்ளது.

அசோகா நாடகத்திற்கான நெறியாள்கையை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் மேற்கொண்டுள்ளார். (ஸ்ரீ)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2010.12 17

- 0942 - நோர்மண்டியின் முதலாம் வில்லியம் படுகொலை செய்யப்பட்டான்.
- 1398 - சுல்தான் மெஹ்மூடின் படைகளை டில்லியில் வைத்து டீமூர் படைகள் தோற்கடித்தன.
- 1577 - பிரித்தானிய அரசி முதலாம் எலிசபெத்துக்காக அமெரிக்காவின் பசிபிக் பெருங்கடல் பகுதியை ஆராய்வதற்காக பிரான்சிஸ் டிரேக் இங்கிலாந்து, பிளைமவுத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டான்.
- 1718 - பெரிய பிரித்தானியா ஸ்பெயினுடன் போரை அறிவித்தது.
- 1819 - சிமோன் பொலிவார் பெரிய கொலம்பியாவின் விடுதலையை அறிவித்தான்.
- 1834 - அயர்லாந்தின் முதலாவது தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் டென்னசி, மிசிசிப்பி, கென்டக்கி ஆகிய மாநிலங்களில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- 1926 - லித்துவேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து மக்களாட்சி அரசு கலைக்கப்பட்டு அண்டானஸ் சிமெத்தோனா ஆட்சியைப் பிடித்தார்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் வடக்கு போர்ணியோவில் இறங்கினர்.
- 1947 - இலங்கைத் தமிழரசுக் கட்சி அமைக்கப்பட்டது.
- 1961 - கோவாவை இந்தியா, போர்த்துக்கலிடம் இருந்து கைப்பற்றியது.
- 1967 - ஆஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் விக்டோரியா மாநிலத்தில் போர்ட் கடலில் நீந்தும்போது காணாமல் போனார். இவர் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.
- 1970 - போலந்தில் கிதினியா நகரில் தொடருந்துகளில் இருந்து இறங்கிய தொழிலாளர்களை நோக்கிச் சுட்டதில் பலர் கொல்லப்பட்டனர்.
- 1973 - ரோம் நகர விமான நிலையத்தை பாலஸ்தீனத் தீவிரவாதிகள் தாக்கியதில் 30 பயணிகள் கொல்லப்பட்டனர்.
- 1983 - லண்டனில் ஹரட்ஸ் பல்பொருள் அங்காடியில் குண்டு வெடித்ததில் 7 பேர் கொல்லப்பட்டனர்.
- 1986 - போதைப் பொருள் வர்த்தகத்துக்கெதிராகக் குரல் கொடுத்த கொலம்பியாவின் பத்திரிகையாளர் கில்லெர்மோ இசாசா சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1989 - 25 ஆண்டுகளின் பின்னர் பிரேசிலில் முதலாவது பொதுத்தேர்தல் இடம்பெற்றது.


### பிறப்புகள்

- 1908 - வில்லார்ட் ஃபிராங்க் லிப்பி, அமெரிக்க இயற்பியல் வேதியிலாளர் (இ. 1980)
- 1959 - ரஞ்சகுமார், ஈழத்தின் சிறுகதையாசிரியர்
- 1972 - ஜோன் ஆபிரகாம், இந்திய நடிகர்
- 1975 - சுசந்திகா ஜயசிங்க, இலங்கையின் ஓட்ட வீராங்கனை

### இறப்புகள்

- 1947 - ஜொஹான்ஸ் நிக்கொலஸ் பிரோன்ஸ்ட்டெட், டென்மார்க் நாட்டு வேதியியலாளர் (பி.1879)
- 1967 - ஹரல்ட் ஹோல்ட், முன்னாள் அவுஸ்திரேலியப் பிரதமர் (பி.1908)
- 1975 - சோ.இளமுருகனார், ஈழத்துப் புலவர் (பி.1908)
- 1979 - சேர் ஒலிவர் குணதிலக்க, இலங்கையின் மகா தேசாதிபதி

1903-ரைட் சகோதரர்கள் வடக்கு கரொலைனாவில் முதல் முதலில் பன்னிரண்டு வினாடிகள் எஞ்சின் உந்தும் ஊர்தியில் பறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை, அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ்

# ஊழியர்களதும் தொழில் வழங்குநர்களதும் உரித்துக்கள், கடப்பாடுகள், பொறுப்புக்கள் ②

சேவையில் இருந்து விலகும்போது இவ் விடுமுறை கடந்த ஆண்டில் உரித்துடைய விடுமுறைகளில் பயன்படுத்தப்படாத மீதி விடுமுறை நாட்கள் இருப்பின் அவையும் சேவையிலிருந்து விலகும் ஆண்டில் 10 மாதங்களுக்கு குறைவாகச் சேவையாற்றியிருப்பின் மாதம் ஒன்றிற்கு ஒருநாள் வீதமும் 10 மாதங்களுக்கு மேல் எனின் 14 நாட்களுக்கும் உரித்துண்டு.ஏதாவது வகையில் விடுமுறை கிடைக்காவிட்டால் அதற்காக பணக்கொடுப்பனவு பெற உரித்துண்டு.

**பகிரங்க விடுமுறை நாட்கள்**

அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட பகிரங்க வர்த்தக விடுமுறை தினங்கள் பகிரங்க விடுமுறை நாட்களாகும். அவையாவன,

தைப்பொங்கல், தேசிய தினம் (பெப்ரவரி 4) , சிங்கள- தமிழ் ,புத்தாண்டிற்கு முந்திய தினம், சிங்கள- தமிழ் புத்தாண்டு தினம், மேதினம், விசாக முழு நோன்மதி தினத்திற்கு அடுத்த தினம், நபிகள் நாயகம் அவர்களின பிறந்த தினம், நத்தார்தினம்

இந்த 8 நாட்களும் சம்பளத்துடனான விடுமுறை தினங்களாகும். இந் நாட்களில் வேலைக்கமர்த்த வேண்டுமாயின் தொழில் ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.இந் நாட்களில் ஊழியர் வேலைக்கமர்த்தப்படின் அந்த விடுமுறை நாளிற்குப் பதிலாக சம்பளத்துடனான பதில் விடுமுறை நாளினை அவ்வருட டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் வழங்குதல் வேண்டும். அல்லது வேலை செய்யும்விடுமுறை நாளுக்கு இருமடங்கு சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

வர்த்தக விடுமுறை நாளொன்றுக்கு வாராந்த விடுமுறை நாள் ஒன்றில் வருமிடத்தில் வர்த்தக விடுமுறை, முன்னால் இடம்பெறும் அதாவது வர்த்தக விடுமுறை தினத்திற்கான உரித்து மேற்படி பந்திக்கமைய அன்றைய தினம் வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் வாராந்த விடுமுறைக்கான உரித்து அதே வாரத்தில் வழங்கப்படலும் வேண்டும்.அத்துடன் வாராந்த விடுமுறை (முழு அல்லது அரை) அதேநேரத்தில் அல்லது அடுத்து வரும் வாரத்தில் புறம்பாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

**நோன்மதி (போயா)விடுமுறை**

♦ இத்தினம் சம்பளத்துடன் கூடிய விடுமுறை தினமாகும்.

♦ போயா தினம் வார விடுமுறை நாளொன்றில் அல்லது பகிரங்க விடுமுறை நாள் ஒன்றில் வரின் அதற்குப் பதிலாக மேலதிக விடுமுறை தினம் வழங்கப்பட மாட்டாது.

♦ இவ் விடுமுறை தினத்தில் ஊழியரை வேலைக்கமர்த்தினால் ஒன்றரை மடங்கு சம்பளம் வழங்கப்படல் வேண்டும் (மேலதிக நேரக் கொடுப்பனவு அடிப்படையில்) அதாவது 50% மேலதிக சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

**பிரசவ விடுமுறை**

♦ கடை, அலுவலகங்களில் வேலைக்கமர்த்தப்படும் ஒவ்வொரு பெண் ஊழியருக்கும் உயிருடன் பிறக்கும் முதல் இரு குழந்தைகளுக்காக சம்பளத்துடன் கூடிய 84 வேலை நாட்கள் விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பின் பிறக்கும் குழந்தைகளுக்காக சம்பளத்துடனான 42 வேலைநாட்கள் மட்டுமே வழங்கப்படலாம். உயிரின்றிக் குழந்தை பிறந்த போதிலும் கரு உருவத்துடன் முண்டமாக பிறந்தால் பொதுவான பிரசவத்தைப் போன்று 42 நாட்களுக்கு பிரசவ விடுமுறை பெற உரித்துண்டு. பிரசவ விடுமுறை நாட்கள் கணிக்கப்படுகையில் ஏனைய விடுமுறை நாட்கள் உள்ளடக்கப்படலாகாது.

**தொழில் வழங்குநரின் பொறுப்புக்கள்**

***1.சம்பளம் வழங்கல்***

கடை அலுவலக ஊழியர்களுக்கு தொழில்வழங்குநர், ஊழியர் என்போரின் இணக்கத்தின் பேரில் சம்பளம் நிர்ணயிக்கப்படும் . ஊழியரின் சம்பளம் அங்கீகரிக்கப்பட்ட பணத்தினால் அனுமதிக்கப்பட்ட கழிவுகளுடன் மட்டும் வழங்கப்படுதல் வேண்டும். ஊழியரின் விருப்பப்படியான கழிவுகள் 60% க்கு மேற்படலாகாது.

***2.சம்பளம் வழங்கும் கால எல்லை***

சம்பளம் வழங்குதல் வாரத்திற்கு ஒருமுறையெனின் அவ் வாரம் கழித்து 3 நாட்களுக்குள்ளும், இரு வாரங்களிற்கு ஒருமுறையெனின் இரு வாரங்கள் முடிந்து 5 நாட்களுக்குள்ளும், மாதத்திற்கு ஒருமுறையெனின் மாதம் முடிவடைந்த 10 நாட்களுக்குள்ளும் வழங்குதல்வேண்டும்.

சேவை முடிவுறுத்தும் சந்தர்ப்பங்களில் முடிவுறுத்தப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குள் உழைத்த சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

***3. பதிவேடுகள் பேணலும் பராமரித்தலும்***

சகல தொழில் கொள்வோரும் பின் வரும் பதிவேடுகளைப் பேணிப் பராமரித்தல் வேண்டும்.

1.ஒவ்வொரு ஊழியர் சம்பந்தமான சேவை பதிவேடு இதற்காக படிவம் (F) பாவிக்கப்படல் வேண்டும்.

2.ஒவ்வொரு ஊழியரும் வேலை செய்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை அவருக்கு வழங்கப்பட்ட விடுமுறைநாட்களின் எண்ணிக்கை என்பவற்றை உள்ளடக்கிய நேரப்பதிவேடு (வரவு இடாப்பு) குறிக்கப்பட்ட 'ஈ' (E) படிவத்தில் பேணிப்பராமரித்தல் வேண்டும்.

**க.கனகேஸ்வரன்**
உதவித்தொழில் ஆணையாளர்
மாவட்டத்தொழில் அலுவலகம் - யாழ்ப்பாணம்

3. சகல ஊழியர்களைப் பொறுத்த வரையிலும் கொடுப்பனவு செய்யப்படும். சம்பள விபரங்கள் அடங்கிய சம்பளப்பதிவேடு

சகல ஊழியர்களுக்கும் சேவை நியதி நிபந்தனைகள் அடங்கிய நியமனக் கடிதம் வழங்கி அவர்களின் ஒப்புதலைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இத்தகைய பதிவேடுகள் 6ஆண்டுகளுக்கு தொழில்தருநரால் பரிசோதனைக்காக பேணிப்பாதுகாத்தல் வேண்டும். (தொடரும்)

# மாவட்டச் செயலாளர்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

மாவட்டச் செயலாளர் பதவிகளை மீண்டும் அரசாங்க அதிபர் என மாற்றி அவர்களுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவது குறித்து பொதுநிர்வாக, உள்ளூராட்சி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பாக இவ் அமைச்சு சட்டமா அதிபருடன் கலந்தாலோசனை நடத்தியதாக அமைச்சர் ஜோன் செனவிரட்ண நேற்று முன்தினம் தெரிவித்தார்.அவர்மேலும் தெரிவிக்கையில்,

இவ்விடயம் குறித்து நாம் சட்டமா அதிபருடன் கலந்தாலோசனை நடத்தியதில் அவர் இதுகுறித்து ஆராய்ந்து வருகிறார். மேலதிக பிரதேச செயலாளர்களை கண்காணிப்பதற்கு ஏற்றவகையில் மாவட்ட செயலாளருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படும்.

மேலதிக மாவட்ட செயலாளரினால் எவருக் கேனும் அநீதி இழைக்கப்பட்டால் அதுகுறித்து மாவட்ட செயலாளரிடம் முறையீடு செய்யலாம் என அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட அமைச்சர்

பொருத்தமில்லாத ஆடையுடன் அமைச்சரவைக் கூட்டத்திற்கு வந்த அமைச்சர் ஒருவரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருப்பி அனுப்பிய சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு கட்டைக் கையுள்ள ஷேர்ட் அணிந்தவாறு மேற்படி அமைச்சர் வருகை தந்திருந்தார்.

இதை அவதானித்த ஜனாதிபதி வீட்டிற்குச் சென்று அமைச்சரவைக்குப் பொருத்தமான ஆடை அணிந்து கொண்டு வருமாறு குறித்த அமைச்சரை திருப்பி அனுப்பினார்.

குறித்த அமைச்சர் கடந்த அமைச்சரவை மாற்றத்தின் போது முதல் தடவையாக அமைச்சரவை அந்தஸ்து பெற்றவர். இதற்கு முன்னரும் பொருத்தமான ஆடை அணிந்து வருமாறு அவர் ஜனாதிபதியினால் அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# போதை விநியோகிக்கும் கைதிகளை பிடிக்கும் சிறைச்சாலை உத்தியோகத்தருக்கு வெகுமதி

(கொழும்பு)

சிறைச்சாலைகள் மற்றும் விளக்கமறியல்களில் போதைப் பொருட்களை விநியோகிக்கும் கைதிகளைச் சிறைகளுக்குள்ளேயே கைது செய்யும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு சேவைக் கௌரவிப்பும் பண வெகுமதியும் வழங்கும் திட்டமொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான உத்தியோகத்தர்கள் சிறைச்சாலை அத்தியட்சகரின் பரிந்துரைக்கு ஏற்ப கௌரவிக்கப்படுவார்களெனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த 13,14 ஆம் திகதிகளில் கண்டி போகம்பறைச் சிறைச்சாலையில் போதைப் பொருள் விற்பனை செய்வதற்குத் தயாரான இரு கைதிகள் சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இச் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தொடர்பாக அறிக்கையைப் பெற்றுக் கொள்ள சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப்பெருமாள் கோவிலில் வைகுண்ட ஏகாதசி பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நாளை காலை வரை நடை பெறவுள்ளது.

இதில் பகல்நிகழ்வாக ஸ்ரீமத் பகவத்கீதை முற்றோதல், ஆண்டாள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரம் முற்றோதல், மூலமூர்த்திக்கு சிறப்புமிகு அபிஷேகம் என்பன நடைபெற்று இரவு நிகழ்வாக நான்கு சாமப் பூசையும் அரங்கநாதனுக்கு சிறப்பு மிகு அபிஷேகமும், வைகுண்டவாசல் திறப்பு நிகழ்வும், மோட்ச அர்ச்சனையும், சுவாமி புறப்பாடும் இடம்பெறும். பகலும் இரவும் தொடர் நாம ஜெபம் நடைபெறவுள்ளது.

கண்ணன் அடியார்கள் அன்றைய தினம் வைகுண்ட வாசனைத் தரிசித்து அருட்கடாட்சத்தை பெற்றுக்கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-4)



## குறைகேள் அரங்கு

# ஒலிபெருக்கிகளின் அட்டகாசத்தை தடுக்க நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஒலிபெருக்கியின் பாதிப்புகள் பற்றி பல தடவைகள் பத்திரிகைகளில் பலரும் விபரித்திருந்தனர். ஆனால் அவையாவும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆகியுள்ளது. யார் என்ன சொன்னாலும் யார் எக்கேடு கெட்டாலும் நாம் ஒலிபெருக்கியை அலறவிட்டே தீருவோம் என சில பிரகிருதிகள் செயற்பட்டால் அவர்களை யார் திருத்துவது?

சமூக நலனில் அக்கறை உள்ளவர்கள், சமயஸ்தாபனங்கள் இவ்விடயம் சம்பந்தமாக உறுதியான முடிவை எடுக்கவேண்டும்.ஆலயங்களில் மட்டுமல்லாது இரவு 9 மணிக்குமேல் மரண அறிவித்தல் செய்கிறோம் எனும் பெயரில் இரவு 12 மணிவரை முழத்துக்கு முழம் நின்று இரவிரவாக கத்தி சோக இசையை அலறவிட்டு பரீட்சைக்கு படிக்கும் மாணவர்களுக்கும் நோயாளர்களுக்கும் பலவித இடையூறுகள் செய்கிறார்கள்.

எனவே ஒலிபெருக்கிகளின் அட்டகாசத்தை தடுக்க சமூக நலனில் அக்கறை கொண்டோர் தக்க நடவடிக்கை எடுத்து ஆரோக்கியமான சமுதாயம் உருவாக வழிகோல வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**க.சிவவரதேஸ்வரன்**
**சுன்னாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்



## மிதுனம்

*(மிருகசீடம் 3,4ஆம் பாதங்கள், திருவாதிரை,புனர்வூசம், 1,2,3 பாதங்கள் வரை)*

*ஜனவரி மாதம் முதல் சந்தோஷம் அதி கரிக்கும்!*

*நாலு பேருக்கு மத்தியில் நகைச்சுவையு டன் பேசி மனதில் இடம் பிடிக்கும் மிதுன இராசி நேயர்களே!*

நீங்கள் உணவுப் பழக்க வழங்கங்களை அடிக்கடி மாற்றுபவர்கள். உணர்ச்சி வசப் படும் பொழுது உங்களை கட்டுப்படுத்த இய லாது. நீங்கள் படிப்படியாக முன்னேறி பார் போற்றி வாழ வேண்டும் என்பவர்களுக்கு மத் தியில் திடீரென முன்னேற வேண்டுமென்ற எண்ணத்தை வளர்த்துக்கொண்டிருப்பவர் கள் பிறர் செய்யும் தவறுகளை நீங்கள் சுட் டிக் காட்டாமல் இருந்தால் பிறரின் எதிர்ப்பு களை வரவழைத்துக் கொள்ளாமல் இருக்க இயலும்.

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது,மாதத் தொடக்கத்திலேயே குருசந்திர யோகம் செயற்படுவதால்,தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணை யாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவு [illegible] கற்ற கல்வியைக் காட்டிலும் பெற்ற அனு பவமே பெரிதும் துணைபுரியும். உற்றார், உற வினர்கள், உங்கள் மீது பழி சுமத்தியவர்கள், தங்கள் தவறை ஒத்துக் கொண்டு தானாகவே உதவி செய்ய முன்வருவார்.

மகரச் செவ்வாயின் சஞ்சார காலத்தில் மட்டும் ஒவ்வொரு செயலிலும் மிக மிக கவ னம் தேவை. அலைச்சலும் அகால நேரத் தில் உணவு உண்ணுதலும்,நம்பிக்கைக் குரியவர்களால் கூட ஏமாற்றங்களை சந்திக் கும் சூழ்நிலையும் உருவாகலாம். எனவே, சுய ஜாதக ரீதியாக தெசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளையும் சிறப்பு பரிகாரங்களையும் மேற்கொண்டால் அந்த ஒன்றரை மாத கால மும், உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படுத்தும் சம்ப வங்களை வரவழைத்துக்கொள்ளலாம்.

*விபரீத ராஜயோகம் செயற்படும் நேரம்!*

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி விருச் சிக இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகி றார். பன்னிரெண்டுக்கு அதிபதியாக விளங் கும் சுக்ரன் ஆறாமிடத்தில் சஞ்சரித்து தனது வீட்டை தானே பார்பதால் ,விபரீத ராஜயோகம் செயற்படப் போகிறது. எனவே திட்டமிடாது செய் யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணி யாக இருந்து உறுதுணை புரிவர். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். கொடுக்கல்- வாங் கல்களில் நீண்ட நாள் வசூலாகாத பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும்.

*கவனமுடன் செயற்பட வேண்டிய நேரம்*

எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி மகர இரா சியில் செவ்வாய் உச்சம் பெற்று சஞ் சரிக்கப் போகிறார். இதன் விளைவாக திடீர் ஊர் மாற் றம், இட மாற்றங்களை ஒரு சிலர் சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் அடிக் கடி அச்சுறுத்தல் ஏற்படும். வைத்திய செலவு கூடும். உடன் பிறப்புகள் வழியில் மனக்க சப்பு தரும் சம்பவங்கள் நடைபெறலாம். வழி பாட்டின் மூலம் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள வேண்டிய நேரமிது.

*வாழ்க்கைப் பிரச்சினைகள் சீராகும் நேரம்!*

எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி தனுசு இராசி யில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளை வாக,மாமன் வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். மதிப்பும் மரியாதையும் கூடும். அர்த்தாஷ்டச்சனியின் ஆதிக்கம் இருந்தா லும் குரு பார்வையால் குழப்பங்கள் தீரும். திருமண யோகம் கைகூடும்.

இம் மாதம் செவ்வாய்தோறும் முருகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

*பெண்களுக்கான சிறப்பு பலன்கள்*

இம்மாதம் வரவு,செலவும் உங்களுக்கு சமமாகும். வருங்கால நலன் கருதி எடுக்கும் முயற்சிகளில் தாமதம் ஏற்படும். ஆரோக் கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது. நோய்க் கான அறிகுறி தெரியும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவதன் மூலம் மன நிம்மதி காணலாம். தொழில் ஸ்தானம் நன் றாக இருப்பதால் தொழில் உத்தியோகத்தில் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். என்றாலும் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்ப தால்,சங்கிலித் தொடர் போல,கடன் சுமை கூட லாம். எதையும் யோசித்துச் செய்வது நல் லது.



## கடகம்

*(புனர்பூசம் 4ஆம் பாதம்,பூசம் , ஆயிலியம் முடிய )*

நினைத்தது நிறைவேறும் நேரம்!

*எண்ணங்கள் எழிதில் நிறைவேற எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று சொல்லும் கடக இராசி நேயர்களே!*

உங்கள் செயற்பாடுகளில் உற்சாகம் குடி கொள்ளும். உதவிக்கரம் நீட்டுபவர்களின் பட் டியலில் முதலிடம் பிடிப்பீர்கள். கற்பனை வானில் சிறகடித்துப் பறக்கும் உங்களுக்கு எப்படி செய்தாலும் முடிவில் வெற்றி வந்து சேர்ந்தால் சரி என்று சொல்வீர்கள். ஆதாயத் தைக் காட்டிலும் புகழையே அதிகம் எதிர்ப் பார்ப்பீர்கள்.

உங்களுக்கு இந்த மார்கழி மாத கிரக நிலை களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, கூடு தல் இலாபம் கிடைத்தாலும் கூட, குழப்பங் கள் அதிகரிக்கும் என்றே சொல்ல வேண் டும். குரு பார்வை ஒன்றுதான் உங்களுக்கு பலத்தை கொடுக்கிறது, பணத்தையும் கொடுக் கிறது. எனவே அந்த குருவைக் கொண்டாடிக் கொண்டேயிருப்பது நல்லது செவ்வாய் பெயர்ச் சிக்குப் பின்னர் செல்வநிலை மேலோங்கும். நினைத்த காரியம் நினைத்தபடியே நிறை வேறும்.

நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறு வீர்கள். கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரும். கவலை தந்த காரியங்கள் துரிதமாக நடைபெறத்தொடங்கும். அங்காரக வழிபாடு உங்கள் அல்லல்களைத் தீர்க்கும்.

*பிள்ளைகளால் பெருமை சேரும் நேரம்!*

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி புத்திர ஸ்தானத்தில் சுக்ரன் வந்திணைகிறார். புத னோடு சுக்ரன் இணைவதால் புத-சுக்ர யோகம் செயற்படப் போகிறது. எனவே பூமி யோகம் கிடைக்கும். புதிய சொத்துக்களை வாங்கிச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும். வைத்திருக் கும் சொத்துக்களை விற்று விட்டு, வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங் கும். மாமன் ,மைத்துனர் வழியில் நடை பெறும் சுப காரியத்தை முன்னிட்டு சிறிது செலவிடும் சூழ்நிலை உருவாகும். பிள்ளை களால் உதிரி வருமானங்கள் பெருகும். நல்ல குழந்தைகளாக இருந்தும் இப்படி திசை மாறிச் சென்று விட்டார்களே என்ற கவலை இனி மாறும்.

*செழிப்பு தரும் செவ்வாய் பெயர்ச்சி!*

மகர இராசியில் எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி செவ்வாய் உச்சம் பெறுகிறார். இந்த உச்சம் பெற்ற செவ்வாய் மிச்சம் வைக் கும் அளவு தொழில் இலாபத்தை உருவாக் குவார். சகோதர பாசம் கூடும். விலகிச் சென் றவர்கள் விரும்பி வந்து சேர்வர். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்ற அரசி யல்வாதிகள் ஒத்துழைப்பு செய்வர். பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிடைக்கும்.

*மறைந்த புதனால் நிறைந்த தனலாபம்!*

ஜனவரி 7ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 12க்கு அதிபதி 6இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விபரீத ராஜயோகம் செயற்படப் போகிறது.

இதனால் வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும். கலக்கங்கள் மாறும், கௌரவம் கூடும், பழக்கத்தில் புதியவர்கள் வந்திணை வர், பண வரவும் திருப்தி தரும்.

இம்மாதம் 6இல் இராகுவும் 12இல் கேது வும் இருப்பதால் சர்ப்ப சாந்தி செய்வதன் மூலம் முன்னேற்றத்திற்கு ஏற்படக்கூடிய முட் டுக்கடைகள் அகலும்.முருகன் வழிபாடு உங் கள் முயற்சிக்கு உறுதுணையாக இருகும்.

**சிவல்புரி சிங்காரம்**

*பெண்களுக்கான சிறப்பு பலன்கள்.*

இம்மாதம் குடும்பத்தில் ஒற்றுமை கூடும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். குரு பார்வையிருப்பதால் கண வன்- மனைவிக்குள் அந்நியோன்யம் அதி கரிக்கும் உங்கள் பெயரிலேயே பணத்தை வைப்புச் செய்ய முன்வருவர்.

குழந்தைகள் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். மாற்றினத்தவரால் வந்த பிரச்சினை கள் அக லும். மாதக் கடைசியில் மறக்க முடியாத சம்பவமொன்று நடைபெறும்.

(தொடரும்)

# வாக்காளர் பட்டியல் பதிவு ஜனவரி வரை காலநீடிப்பு

(கொழும்பு)

வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப் படாத வடக்கு , கிழக்கைச் சேர்ந்த இ டம் பெயர்ந்தவர்கள் தமது பதிவுகளை மேற் கொள்வதற்கான கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக் களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரி வித்துள்ளார்.

இந்நிலையில் இது வரைகாலமும் வாக் காளர் பட்டியலில் பதியப்படாதவர்கள் எதிர் வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன் னதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறி விக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பிரதேச உதவித் தேர்தல் ஆணையாளரிடம் தேசிய அடையாள அட் டைகளை சமர்ப்பித்து பதிவுகளை செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (ச-7)

# வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

மாலுசந்தியில் இருந்து உடுப்பிட்டி செல்லும் வீதி மிக நீண்ட காலமாக புனரமைப்பு செய் யப்படாமையால் அவ்வீதி ஊடாக பயணம் செய் யும் பொதுமக்கள் மற்றும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதி குன்றும் குழியுமாக காணப்படு வதனால் இதனூடாக செல்லும் வாகனங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றில் பயணம் செய் வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வரு கின்றனர்.

இவ்வீதியில் வடமராட்சி மத்திய மகளிர் கல் லூரி மற்றும் பருத்தித்துறை நீதவான் நீதி மன்றம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி ஆகிய முக்கிய மான இடங்கள் அமைந்துள்ளன.

ஆயிரக்கணக்கான மாணவர்கள், அரச உத் தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் பய ணம்செய்வதால் இவ்வீதியை உடனடியாக புனரமைத்து தருமாறு பொதுமக்களும் பயணி களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)






யாழ். படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ். அடைக்கலமாதா ஆலய வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிமி-கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வில் அருட்தந் தையர்கள் நத்தார் கீதம் இசைப் பதையும் விருந்தினர்கள் அமர்ந் திருப்பதையும் படங்க ளில் காணலாம்.

(படங்கள்-எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்க்கவாயில் ஏகாதசி விரதத்தின் சிறப்புக்கள்



மார்கழிமாத சுக்கில பட்ச ஏகாதசி மோக்ஷதா எனப்படும். இதனை வைகுண்ட ஏகாதசி, சுவர்க்க வாயில் ஏகாதசி என்றெல்லாம் சிறப்பாக வழிபாடுகள் செய்து, விரதம் அனுஷ்டித்துக் கொண்டாடுவார்கள். இந்த நாளிலே மகாவிஷ்ணு ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக யோக நித்திரையினின்றும்

## இன்று சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்

விழித்து உலகினைப் பாதுகாக்கின்றார். இந்த நாளிலே நாமும் பிறவிப்பிணி அகல மனத் தூய்மையுடன் ஸ்ரீ மகா விஷ்ணுவை வழிபடல் சிறப்பானதாகும்.

கீதோபதேசத்திலே கண்ணபிரான் மாதங்களில் நான் மார்கழி எனக் கூறுவதனாலும் இம் மாதம் முழுவதும் திருப்பாவை ஓதியும், ஆழ்வார்களையும், நாராயணனையும் வழிபடுவது நற்பேற்றைத்தரும் என்பதாலும் மார்கழி மாத சுவர்க்கவாயில் ஏகாதசி பெருமாளின் திருவருளை தரவல்லதாகப் போற்றப்படுகின்றது.

*பண்ணவர் அமுதினைப்பருகிய தினமென*
*எண்ணுதல் விரதமாம் ஏகாதசியினில்*
*கண்ணனைப் போற்றிடும் கண்ணிய அடியவர்*
*புண்ணிய உலகினிற் புகுவது திண்ணமே*

என வரும்பாடல் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அருளமுது உண்ட புனிதமான பெருநாளாகவும் மார்கழிச் சுவர்க்கவாயில் ஏகாதசி கொண்டாடப்படுகின்றது என்பதை விளக்குகின்றது.

பல்வேறு சிறப்புக்கும் பெருமைக்கும் உரியதான மார்கழிமாத வைகுண்ட ஏகாதசி பற்றிப் பல புராண வரலாறுகள் காணப்படுகின்றன.

அவ்வாறு கூறப்படுபவற்றில் அம்பரீசன் எனும் மகாராசா விரதமிருந்து பாராயணம் செய்யத் தொடங்கிய போது துருவாச முனிவர் அவ்விடம் வரவும் முனிவரைத் தம்முடன் அமுதுண்ண வரும்படிவேண்டினார். முனிவர் தாம் யமுனையிற் தீர்த்தமாடி வரும் வரை பொறுத்திருக்குமாறு மன்னனைக் கேட்கவும், மன்னனும் சம்மதித்து தனது பாராயணம் முடித்து துளசியும் கங்கை நீரும் உண்டு விட்டு முனிவரை எதிர்பார்த்திருந்தான்.

கங்கையில் நீராடிவிட்டு வந்த முனிவர் மன்னன் தான் வரும்வரை பொறுக்காமல் துளசிநீர் உண்டுவிட்டு கண்டு கோபித்து, ஒரு பூதத்தை ஏவி மன்னனை அழிக்கும்படி கூறினார்.

அம்பரீச மகாராசா நாராயணனே அபயம் என வேண்டி நின்றார். மகாராசாவுக்கு அருள்புரியவென திருமாலின் சுதர்சன சக்கரம் தோன்றிப் பூதத்தை அழித்துவிட்டு முனிவரைத் துரத்தவும் முனிவர் தேவர்களிடமும் பிரமாவிடவும் முறையிட்டு இறுதியில் மகா விஷ்ணுவிடம் தஞ்சமடைந்தார்.

மகாவிஷ்ணு முனிவரை நோக்கி "எனது பக்தன் அம்பரீசனிடமே போய்விடுங்கள் முனிவரே'' என்று பணிக்கவும் முனிவர் இறுதியில் அம்பரீசனுடைய திருமால் பக்தியை மெச்சி அவனடிபணிந்தார். முனிவரைத் துரத்திய சுதர்சன சக்கரம் மகாராசா அம்பரீஷன் கேட்டுக் கொண்டபடி திருமால் கரங்களை போய்ச் சேர்ந்தது. பின்னர் முனிவர் அம்பரீஷனுடன் திருவமுதுண்டு மகிழ்ந்து சுவர்க்க வாயில் ஏகாதசி விரதத்தின் நற்பேறடைந் தனன்.

இவ்வாறாகச் சுவர்க்கவாயில் ஏகாதசி பற்றிப் பல புராண வரலாறுகள் எடுத்துக் கூறுகின்றன. இன்றும் மார்கழி மாதத்து வைகுண்ட ஏகாதசியனும் சுவர்க்கவாயில் ஏகாதசி நாளிலே மரணிப்பவர்கள் சுவர்க்க லோகம் போய்ச் சேர்வார்கள் என்ற நம்பிக்கை எம் மக்களிடையே இருக்கின்றது.

**நீர்வைமணி**

விண்ணவர்க்கும், மண்ணவர்க்கும் சிறந்ததுதான் மார்கழி மாதத்திலே உள்ளன்புடன் இறை வழிபாடுகள் செய்து விரதம் அனுஷ்டித்து எல்லோரும் இன்புற்றிருக்க நினைந்திடுவோம்.

# கணனி மயப்படுத்தல் ஆரம்ப விழா

(அல்வாய்)

பருத்தித்துறை சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்க கூட்டுறவுச் சங்கத்தின் கணனி மயப்படுத்தல் ஆரம்பவிழா நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு சங்கப்பணிமனையில் தலைவர் சோ.கங்காதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சே.இலகுநாதன், சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மாவட்ட செயலாளர் சு.நகுலேஸ்வரன், பருத்தித்துறை பிராந்திய சபைத்தலைவர் கி.கணேசன், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தலைவர் பா.இரகுநாதன், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பொ.கோகுலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவநேசன், ப.நோ.கூ.சங்கத்தலைவர் த.சந்திரதாஸ், புலோலி ப.நோ.கூ. சங்கத்தலைவர் ச.வல்லிபுரநாதன், சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய தலைவர் கி.குகநாதன், பருத்தித்துறை சமாச வெளிக்கள அலுவலர் ந. சிவகுமாரன், ஆலடிப் பிள்ளையார் ஆ[illegible] பரிபாலன சபைத்தலைவர் த.தங்கராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-19)

# அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் ஒரே நோக்கத்துடன் பணியாற்றவேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் ஒரே நோக்கத்துடனே செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதே இதன் பிரதான நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார். அலரிமாளிகையில் கடந்த 14ஆம் திகதி இடம் பெற்ற நியமனங் களை வழங்கும் நிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதுதவிர மக்களுக்குஉரிய சேவையினை வழங்க அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் பொறுப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# 30 வருடமாக உறவினர்களுடன் தொடர்பற்றிருந்த பணிப் பெண்

(கொழும்பு)

பஹ்ரெய்ன் நாட்டுக்கு 30 வருடங்களுக்கு முன் பணிப்பெண்ணாக சென்ற இலங்கையர் ஒருவரின் உறவினர்களை கண்டுபிடிக்கும் முயற்சியில் வெளிவிவகார அமைச்சு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இவரின் பெயர் மாரசிங்க ஆராய்ச்சிகே கல்யாணவதி (வயது 66). இம்மாத ஆரம்பத்தில் மாரடைப்பால் இறந்துள்ளார். பஹ்ரெய்னில் கல்யாணவதி இஸ்லாமுக்கு மதம் மாறி இருந்தார்.

இவரை பஹ்ரெய்னுக்கு அழைத்திருந்த எஜமானரையே திருமணம் செய்து வாழ்க்கை நடத்தினார். ஆனால் இவர் இலங்கையில் இருந்த உறவினர்களுடன் தொடர்புகளை கைவிட்டு இருந்தார்.

இவரது கணவனோ இரு வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார்.இந்நிலையில் இவர் கடந்த இரு வருடங்களாக விசாவை [illegible]ப்பிக்காமல் சட்டவிரோதமான முறையி[illegible] நாட்டில் தங்கியிருக்கின்றார்.

இவரின் சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்க அங்குள்ள இலங்கைத் தூதரகம் பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆயினும் இலங்கையில் உள்ள இவரின் உறவினர்களை இன்னமும் கண்டு பிடிக்க முடியவில்லை. (ஸ்ரீ-2)

# உலக நாடுகளில் வறுமையை இல்லாதொழிப்பதே எமது நோக்கம்

## உலக உணவுத்திட்டப் பிரதிநிதி தெரிவிப்பு

உலகத்தில் வறுமைகாரணமாக பல மில்லியன் மக்கள் இதுவரைக்கும் இறந்துள்ளனர். இவ்வாறு இறப்பவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கோடு தான் நாம் செயற்பட்டு வருகின்றோம் என உலக உணவுத் திட்ட பிரதிநிதி போலெற் ஜேனாற் தெரிவித்துள்ளார்.

உலக உணவுத்திட்ட யாழ்.பிராந்திய காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

உலகளாவிய ரீதியில் எமது நிறுவனத்தின் பணியானது விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இது வரையில் 77 நாடுகளில் 90 மில்லியன் மக்களுக்கு எம் நிறுவனத்தினால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களைச் சேர்ந்த நாடுகளுக்கே அதிகமாக உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

உணவுப் பற்றாக்குறையால் 2010 ஆம் ஆண்டில் மட்டும் ஒரு பில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை இலங்கையில் இதுவரைக்கும் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு உணவும் வேறு உதவிகளும் வழங்கியுள்ளோம்.

நாம் எந்த நாட்டிற்கும் எந்த வேளையிலும் உதவிகள் வழங்கத் தயாராக உள்ளோம். எங்களிடம் இருந்து தேவையான உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

உலக உணவுத்திட்டம் பற்றி மக்கள் அறிந்திருக்கவேண்டும். எமது உதவிகள் சில சந்தர்ப்பத்தில் தாமதம் ஆகலாம். இதற்குப் பல காரணங்கள் உண்டு. பாதிப்புற்ற மக்களுக்கு உதவிகள் வழங்க குறித்த நாட்டின் அனுமதி பெறவேண்டும். நாம் தன்னிச்சையாக செயற்படமுடியாது. நாம்வேறு சில நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு வருகிறோம். உணவை சுத்தமானதாக வழங்க ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். உணவு வழங்குவது மட்டுமல்ல அது தகுந்த முறையில் மக்களின் கைகளில் சென்றடைய வேண்டும் என்பதில் நாம் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றோம். இலங்கையைப் பொறுத்தவரை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், உணவுப் பற்றாக் குறை என்பது குறைவாக உள்ள அதே வேளை சத்துள்ள உணவினை உட்கொள் வது குறைவு.

இதனை நிவர்த்தி செய்யவே இலங்கையில் எமது நிறுவனம் இயங்கி வருகிறது. இத்தகைய நிலைகள் மாற்றமடைந்ததும் வேறு நாட்டிற்கு எமது பணிகளை மேற்கொள்ளத் தயாராகவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# கிறிஸ்து பிறப்பு அமைதி விழா

இலங்கை மின்சார சபையின் யாழ். நகரப் பணிமனை நடத்தும் "கிறிஸ்து பிறப்பு அமைதி விழா'' இன்று வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கை மின்சாரசபையின் பிரதிப்பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்துடன் கிறிஸ்மஸ் கீதங்கள், நடனங்கள் என்பன இடம்பெறும். (ஸ்ரீ-2)

# நிர்வாகசபைக் கூட்டம்

வடமராட்சி நல்லொழுக்க நிறுவன நிர்வாகசபைக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அலுவலக மண்டபத்தில் நிறுவனத்தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கடந்த மாத பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு நிறுவனச் செயலாளர் மு.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேஸ்புக் நிறுவுனருக்கு விருது

(நியூயோர்க்)

உலகில் எந்தப் பகுதியில் இருக்கும் நபரை வேண்டுமானாலும் நட்பு வளையத்துக்குள் கொண்டு வர உதவும் பேஸ்புக் இணையத் தள நிறுவுனர் மார்க் சக்கர்பர்க்கை 2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த மனிதராக டைம்ஸ் பத்திரிகை தெரிவு செய்துள்ளது.

26 வயதேயான மார்க் சக்கர்பர்க் இளம் பில்லியனர்கள் பட்டியலில் இருப்பதால் மட்டும் இந்த விருது அவருக்கு வழங்கப்பட வில்லை.

அண்மையில் மார்க் தனது சொத்தின் அரைவாசியை தர்ம காரியங்களுக்கு வழங்க இருப்பதாக அறிவித்தார். அவரது தயாள சிந்தனையைப் பாராட்டும் வகையில் அவருக்கு இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டுள்ளதாக அப் பத்திரிகை அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# பருவநிலை மாறுபாடு குறித்த ஒப்பந்தத்தில் இந்தியாவும் சீனாவும் கையெழுத்திடவேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

(வோஷிங்டன்)

பருவநிலை மாறுபாடு தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியாவும் சீனாவும் முதலில் கையெழுத்திட வேண்டும். அதன் பின்னர் தான் நாங்கள் கையெழுத்திடுவோம் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

பருவநிலை மாறுபாடு பிரச்சினையில் இருந்து புவியைக் காக்க உலக நாடுகள் கரியமில வாயு வெளியீட்டு அளவை குறைத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு நாடும் தங்கள் நிலையில் இருந்து விட்டுக் கொடுக்காமல் இருப்பதால் ஒப்பந்தங்கள் ஏற்படுவதில் இழுபறிநிலை நீடிக்கிறது.

அதிக அளவு கரியமில வாயுவை வெளியிடும் அமெரிக்கா அந்த அளவை குறைத்துக் கொள்ள வேண்டும். வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் தொழில் நுட்பத்தை வழங்க அமெரிக்கா சரியாக நிதி வழங்க வேண்டுமென இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகள் வலியுறுத்துகின்றன.

பருவநிலை மாறுபாடு பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக மெக்ஸிகோவின் கான்குன் நகரில் சமீபத்தில் நடைபெற்ற மாநாட்டிலும் முடிவுகள் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை.

இந்நிலையில் வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய பருநிலை மாறுபாடு பிரச்சினை தொடர்பான அமெரிக்க அரசின் சிறப்பு தூதர் டோட் ஸ்டென் கூறுகையில்,

சீனா, இந்தியா போன்ற நாடுகள் இப்போது தொழில்துறை, பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வருகின்றன. இந்த நாடுகளும் பிற வளரும் நாடுகளும் பருவநிலை மாறுபாடு தொடர்பான ஒப்பந்தத்தில் முதலில் கையெழுத்திட வேண்டும். அதுவரை அமெரிக்கா சட்ட ரீதியாக எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திடாது.

அவர்கள் தங்கள் வழியிலேயே தொடர்ந்து சென்று கொண்டிருக்கும் போது கரியமிலவாயு வெளியீட்டை குறைத்துக் கொள்ளுங்கள் என்று பிற நாடுகளை எப்படி வலியுறுத்த முடியும்.

கான்குன் மாநாட்டில் இந்தியா தனது சொந்த நலனில்தான் அதிக அக்கறையுடன் நடந்து கொண்டது என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)






அவுஸ்திரேலியா, கிறிஸ்மஸ் தீவில் பாறையில் மோதி கவிழ்ந்த படகில் இருந்தவர்களை மீட்கும் பணியில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளனர். உள்படம் பாறையில் மோதுமுன் படகு தத்தளிக்கிறது.

## ஈரானில் மசூதியில் நடந்த குண்டுவெடிப்பில் 38 பேர் பலி

(டெஹ்ரான்)

ஈரானில் இரு மசூதிகளில் நடந்த மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 38 பேர் பலியாகியதுடன் 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

ஈரானின் தென்கிழக்கு மாகாணத்தில் பெரிய நகரமான சாபாஹரில் பர்மந்தாரி எனும் மசூதி உள்ளது.

இங்கு வழக்கம் போல் தொழுகை நடந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென இரு மனித வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடந்தன.

இதேபோன்று இமாம் ஹூசைன் எனும் மசூதியிலும் வெடிகுண்டுத் தாக்குதல் நடந்ததாக ஈரான் குடியரசு செய்தி முகவர் செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## விக்கிலீக்ஸ் இணையத்தளத்திற்கு அமெரிக்க விமானப்படையில் தடை

இராணுவ இரகசியங்களை அனுமதியின்றி வெளியிட்டதாகக் கூறி விக்கிலீக்ஸ் இணையத்தளத்திற்கு அமெரிக்க விமானப்படையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க விமானப்படை செய்தித் தொடர்பாளர் மாஜ் டோனி கூறுகையில்,

ஒரு குறிப்பிட்ட சார்பான செயல்களை அனுமதிக்க முடியாது. எங்களுக்கு உள்ள தொடர்புகள் மூலம் இந்தத் தடையை விரைவாக செயற்படுத்தி வருகிறோம்.

விக்கிலீக்ஸ் போன்ற குறிப்பிட்ட இணையத்தளங்களை பார்வையிடும்போது விமானப்படையில் உள்ள சர்வர்களுக்கு தேவையற்ற பாதிப்புகள் ஏற்படுவதை தடுக்கவே இந்த ஏற்பாடு அமெரிக்க விமானப் படையில் மட்டுமே இந்தத் தடை செயற்படுத்தப்படுகிறது.

இராணுவத் தலைமையகமான பென்டகன் உள்ளிட்ட பிற பிரிவுகளுக்கு இல்லை என மாஜ் டோனி கூறினார்.

ஏற்கனவே அமெரிக்காவின் தி நியூயோர்க் டைம்ஸ், பிரிட்டனின் கார்டியன், பிரான்ஸ் நாட்டின் லி மான்டோ, ஜெர்மனியில் இருந்து இயங்கும் டேர்ஸ்பீகல் மற்றும் ஸ்பெயினின் ஈ பாய்ஸ் போன்ற இணைய தளங்களுக்கும் அமெரிக்க விமானப் படையில் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## நேபாள விமான விபத்தில் 22 பயணிகள் பலியாகினர்

நேபாளத்தில் இருந்து 22 பயணிகளுடன் பயணித்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே காணாமல் போய்விட்டது.

அந்த விமானம் விபத்துக்குள்ளானதும் அதிலிருந்த 22 பேரும் இறந்து போனதும் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேபாளத்தின் லமிதண்டாவிலிருந்து தலைநகர் காத்மண்டுவிற்கு தனியாருக்குச் சொந்தமான சிறிய விமானம் ஒன்று நேற்று முன்தினம் 22 பயணிகளுடன் புறப்பட்டது. பிற்பகல் 3.40 மணியளவில் மலைப்பாங்கான பகுதியில் சென்ற விமானம் திடீரென காணாமல் போயுள்ளது.

அத்துடன் கட்டுப்பாட்டு மையத்திற்கும் விமானத்திற்கும் உள்ள தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டதால் விமானத்தைப் பற்றிய விபரங்கள் தெரியாமல் இருந்தது.

விமானத்தைத் தேடும் பணியில் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## ஈராக்கிற்கு எதிராக ஐ.நா விதித்திருந்த தடைகள் நீக்கம்

நீண்ட காலமாக ஈராக்கிற்கு எதிராக ஐக்கிய நாடுகளினால் விதிக்கப்பட்டிருந்த பல தடைகள் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேயினின் ஆட்சி காலத்தில் விதிக்கப்பட்டிருந்த பல்வேறு தடைகளை நீக்கிக் கொள்ள ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை தீர்மானித்துள்ளது.

ஈராக்கின் தற்போதைய அரசியல் அபிவிருத்தியை அங்கீகரிக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

பாரிய படுகொலை செய்யக்கூடிய இரசாயன ஆயுத உற்பத்திகளில் சதாம் உசேயன் அரசாங்கம் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

குவைத்துடன் இடம்பெற்ற யுத்தத்தை தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு முதல் தடவையாக ஈராக்கிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் அமைப்பு தடைகளை விதித்திருந்தது.

ஈராக்கில் பல துறைகளில் தற்போது அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தடை நீக்கம் தொடர்பான அறிவிப்பு மகிழ்ச்சி அளிப்பதாக ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு வடகொரியா சம்மதம்

ஆறு நாடுகளின் முன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு வடகொரிய ஜனாதிபதி சம்மதம் தெரிவித்துள்ளார். இதை சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜியாங் யூ ஜியாங் கடந்த 14 ஆம் திகதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே போர் பதற்றம் நிலவும் சூழலில் வடகொரியா இவ்வாறு அறிவித்துள்ளதால் இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றம் தணியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வடகொரியாவின் தலைவர் இரண்டாவது கிம் ஜோங்சை சீனப் பிரதிநிதி சந்தித்து ஆலோசனை நடத்தினார். அப்போது தடைப்பட்டிருக்கும் 6 நாடுகள் பேச்சுவார்த்தையை உடனே தொடங்குவதே சிறந்தது என்பதை அவர் சீனப் பிரதிநிதியிடம் வலியுறுத்தினார். இதை ஏற்றுக் கொண்ட கிமோங் எவ்வித நிபந்தனையும் இன்றி பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க சம்மதம் தெரிவித்தார். (ஸ்ரீ-2)




ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ மூன் (இடது) மற்றும் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிரிடன், ஆகியோர் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு குழுகூட்டத்தில் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

அங்கவீனமுற்றுள்ள படைவீரர்களின் புனர்வாழ்வுக்கான மத்திய நிலையம் ஒன்றை அமைக்க வத்தளை ஹெந்தலை ஹோகித்த வீதியில் உள்ள அரச வைத்தியசாலை வளவு மற்றும் அதனைச்சூழவுள்ள பகுதியை இராணுவத்திடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் முன்வைத்த ஆலோசனைக்கு ஏற்ப இந்த முடிவு எடுக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட வைத்தியசாலையை நவீனமயப்படுத்த 30 மில்லியன் ரூபா ஒதுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**இடர்முகாமைத்துவ மத்திய நிலையம்**

24 மணிநேரம் இயங்கும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் இரண்டாம் கட்டத்தை நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

6.5 மில்லியன் செலவிலான இந்தத் திட்டத்தின் முதலாவது கட்டத்தில் 10 மாவட்டங்களை உள்ளடக்கியதாக எச்சரிக்கை ஒலி எழுப்பும் 50 தூபிகளும் 50 தொலைத் தொடர்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் மேலும் 50 எச்சரிக்கை தூபிகளும் 26 தீயணைப்பு மத்திய நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

**கொழும்புக்கு வெளியிலான சுற்றுவட்டப் பாதை**

துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரின் பிரேரணைக்கு அமைய கொழும்புக்கு வெளியிலான சுற்றுவட்டப் பாதையின் கடுவலை முதல் கடவத்தை வரையிலான பகுதிக்கான நிர்மாணப்பணி குறித்து ஜப்பானின் தாய் சேய் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

**இலங்கை இந்திய பயணிகள் கப்பல் சேவை**

துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு ஏற்ப தலைமன்னார்- இராமேஸ்வரம் மற்றும் தூத்துக்குடி- கொழும்பு பயணிகள் கப்பல் சேவையை நடத்த இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட அமைச்சரவை முடிவு செய்துள்ளது. (ஸ்ரீ-2)

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி
## வடமாகாண கல்வி அமைச்சு முன்பாக தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்

(கொழும்பு)

திருகோணமலையில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று நடத்தினர்.

தமக்கான நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கோரியே தொண்டர் ஆசிரியர்கள் கவன ஈர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களாக பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் வடமாகாண கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் தொடர்ந்து கடமையாற்றி வரும் தங்களுக்கு இதுவரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதுடன் கொடுப்பனவுகள் உரிய முறையில் வழங்கப்படுவதில்லையென இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை இந்த விடயம் குறித்து வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவனிடம் வினவியபோது, இது குறித்து மாகாணக் கல்வி அமைச்சுக்கு எந்தவித அறிவிப்பும் செய்யப்படவில்லை எனினும் இடையூறு இன்றி தொண்டர் ஆசிரியர்கள் தமது கவன ஈர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்து மாகாண ஆளுநரின் கையொப்பத்துடன் ஏற்கனவே கல்வி அமைச்சருக்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானத்தின் பின்னரே இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வினை வழங்க முடியும் என்றும் அவர் கூறினார். (ஸ்ரீ-9)

# தேசியகீதம் விவகாரத்தில் விமலின் கருத்து தனிப்பட்டது
## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய கீதத்தை சிங்களத்தில் மாத்திரம் பாட வேண்டும் என்று அவருடைய தனிப்பட்ட கருத்தினையே அமைச்சர் விமல் வீரவன்ச வெளியிட்டிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்ட அமைச்சரிடம் அமைச்சர் விமலின் கருத்துத் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஸ்ரீ-2)

# அனுமதிப் பத்திரமின்றி இயங்கிவந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு
## முகவர் நிலையங்கள் முற்றுகை

அனுமதிப்பத்திரம் இன்றி இயங்கிவந்த மூன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினர் முற்றுகையிட்டு சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளனர்.

கடவத்தை, குருநாகலை மற்றும் அக்கரைப்பற்று போன்ற இடங்களிலேயே இம் முகவர் நிலையங்கள் முற்றுகையிடப்பட்டுள்ளன.

இதன்போது, சந்தேக நபர்கள் வசமிருந்த கடவுச்சீட்டுக்கான, வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக தயாரிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டன.

சந்தேக நபர்கள் அனைவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதோடு மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அதற்கான திகதிகளையும் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்கவின் ஆலோசனையின் கீழ் இச் சுற்றிவளைப்பு நடைபெற்றது. (ஸ்ரீ-4)

# பஞ்சாயத்து தலைவராக பிச்சைக்காரர் தெரிவு

(பதான்)

உத்தரப்பிரதேசத்தில் சமீபத்தில் பஞ்சாயத்து தேர்தல்கள் இடம்பெற்றன. பதான் மாவட்டம் ஷஹாவர் ஷா என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள், இந்தத் தேர்தலில் ஒரு புதுமை செய்துள்ளனர்.

அரசியல் கட்சிகளின் வாக்குறுதிகளை நம்பி வெறுப்படைந்த மக்கள், இம்முறை கட்சி சார்பற்ற ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தனர். அவர் தினமும் தங்களை சந்திக்க வேண்டும் என்றும் விரும்பினர்.

இதற்காக, பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு அவர்கள் தெரிவு செய்தது ஒரு பிச்சைக்காரரை. 70 வயதான நாராயண் நாட் என்ற பிச்சைக்காரரை கிராமத் தலைவர் பதவிக்கு மக்கள் ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இவர் அந்தக் கிராமத்தில் 40 ஆண்டுகளாக பிச்சை எடுத்து வருகிறார்.

இதுகுறித்து நாராயண் நாட் கூறுகையில், கிராம தலை வராவேன் என்று கனவிலும் நினைக்க வில்லை. என்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றுவேன்.

அரசின் நிதியுதவியை கிராமத்தின் முன்னேற்றத்துக்கு முழுமையாக பயன்படுத்துவேன் என்றார்.

என்னதான் கிராம தலைவரானாலும் பிச்சை எடுப்பதை நிறுத்தமாட்டேன் என்றும் அதன்மூலம் கிராம மக்களை தினமும் சந்தித்து அவர்களின் குறைகளைத் தீர்க்க முயலுவேன் என்றும் கூளுரைத்தபடி கையில் பிச்சை பாத்திரத்துடன் வேகமாக கிராமத்தை சுற்றுகிறார் நாராயண் நாட். (ஸ்ரீ-2)

# அனர்த்தங்களை அறிவிக்கும் 100 கோபுரங்கள் நிர்மாணம்

(கொழும்பு)

நாட்டின் சகல பிரதேசங்களிலும் அனர்த்தங்களை அறிவிக்கும் நூறு கோபுரங்கள் மற்றும் 26 தீயணைப்புப் பிரிவுகளை உள்ளடக்கிய முழுமையான அனர்த்த வலையமைப்பு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்ற போது தகவல் அளித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார். இதன் முதற் கட்ட நடவடிக்கையாக 50 கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் கட்ட நடவடிக்கைகளுக்காக அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்திய- இலங்கை நாடுகளுக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை தொடர்பால் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# இலங்கை மத்திய வங்கி மீண்டும் தாக்கப்படாமல் தடுக்க விமானப்படை ஒத்திகை

இலங்கை மத்திய வங்கி மீண்டுமொரு தடவை தாக்கப்பட்டால் அதனை எவ்வாறு முறியடிக்கலாம் என்பது குறித்த ஒத்திகையொன்றில் விமானப் படையினர் தற்சமயம் ஈடுபட்டிருப்பதாக தெரிய வருகிறது.

மீண்டுமொருமுறை தாக்குதல் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அதனை எவ்வாறு எதிர்கொள்வது, சேதங்களைக் கட்டுப்படுத்துவது போன்ற விடயங்கள் குறித்து இலங்கை விமானப் படையின் தீயணைப்புப் படைப்பிரிவினர் தற்போது ஒத்திகையில் ஈடுபட்டுள்ளார்கள்.

விமானப் படைக்குச் சொந்தமான விமானங்கள் மற்றும் தீயணைப்புக் கருவிகளுடன் பெரும் எண்ணிக்கையிலான படைவீரர்கள் இந்த ஒத்திகையில் ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒத்திகையின் காரணமாக அப்பகுதியெங்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருப்பதுடன், அருகில் இருக்கும் ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்பும் அதிகரிக்கப் பட்டிருப்பதாகவும் சோதனை நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



வழுத்து சிதம்பரத்தான் திருவடிக்கு
இன்று (17.12.2010) 5ஆம் நாள் உற்சவம்
(திருவெம்பாவை)

அபயமளித்து எமைக்காக்கும் ஆட வல்லான்

விடமுண்டு தேவருக்கு அருள்புரிந்த ஈசனவன்
வேடனளித்த ஊனினை உண்ட நாதனவன்
காடெல்லாம் சுடலைப் பொடிபூசி ஆடியவன்
கங்கையைத் தலைமுடியில் தரித்த பெம்மானவன்
ஆடலிலே வல்லவனாய் ஆண்டு கொண்டிருக்கிறான்
அபயமளித்தே எமையிங்கு காவல் செய்கிறான்
தேடரிய செல்வ மெலாம் நமக்களித்தவன்
தேவி சௌந்தராம்பிகையுடஞ் சிதம்பரத்தில் உறைகின்றான்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.

(J- 1809)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றம் குதித்தலும் கைகூடும்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு.

– திருவள்ளுவர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வேதம் ஓதி யாகம் வளர்த்து அறம் காக்கும் அந்தணருக்கு நடந்த கதி

சங்கானையில் நடந்த கொள்ளைச் சம்பவத்தின் போது கொள்ளையர்களின் சூட்டுக்கு இலக்கான அந்தணச் சிவாச்சாரியர் சிவஸ்ரீ நித்தியானந்தக் குருக்கள் இறந்துவிட்டார் என்ற செய்தி இந்துக்களின் மனங்களை ரணமாக்கியுள்ளது.

என்ன செய்வது? நாம் தமிழர்கள். அதிலும் இந்து சமயத்தில் பிறந்த பரிதாபத்திற்குரியவர்கள். ஆகையால் எங்களுக்காகக் கதைப்பதற்கும், குரல் கொடுப்பதற்கும் எவருமேயில்லை.

கோயில்களைக் கட்டவும், பூசைகளை நடத்துவதுமே சமயத்தின் பணி என்ற குறுகிய சிந்தனையில் மூழ்கியுள்ள இந்து சமயத்தில் மதகுருமாருக்கு எந்த மதிப்பும் இந்த நாட்டில் கிடைக்காது. கிடைக்கப் போவதுமில்லை.

முறையான மூன்று நேரப் பூசை, மகா குடமுழுக்கு அதற்காகப் பேரம் பேசும் சிறுமை என்பன இருக்கும்வரை எங்கள் சிவாச்சாரியர்களை எவரும் மதிக்க மாட்டார்கள் ஏன்பது தெளிவு.

போர் முடிந்துவிட்டது. நாடு முழுவதும் சமாதானம் என்று அரசு பறைசாற்றிக் கொண்டிருக்கையில், அந்தண சிரேஷ்டர் ஒருவர் கொள்ளையர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார் என்றால், அரசு முதல் படைத்தரப்பு வரை இந்து மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டும் அல்லவா?

படையினரின் ஆயுதத்தைக் கொண்டு கொள்ளையர்கள் நடத்திய நாடகம் இது என்பதோடு சம்பவம் நடந்து முடிந்துவிட்டது.

வேதமோதி யாகம் வளர்த்து அறம் காத்த அந்தணச் சிவாச்சாரியருக்கு நடந்த இந்தச் சம்பவத்தை சர்வ சாதாரணமான விடயமாக எவரும் கருதிவிட முடியாது.

இலங்கையில் படையினர் நடத்தும் எந்தக் குற்றச் செயலுக்கும் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்ற போர்வையைப் போர்த்திவிடுவதும் அவ்வளவு நல்லதல்ல.

ஆயுதம் தரித்த கொள்ளையர்களின் வெறியாட்டத்திற்கு ஓர் அந்தணச் சிவாச்சாரியர் குடும்பம் உயிரையும், சொத்தையும் இழந்துள்ளது.

அந்தணர்களைக் கொல்லும் பாவம் மிகவும் கொடியது என வேதங்கள் கூறுகின்றன.

இந்தப் பாவம் இலங்கையின் எதிர்கால ஆரோக்கியத்துக்கு நல்லதாகத் தெரியவில்லை என்பதை மட்டுமே இப்போதைக்கு கூறிக்கொள்ளலாம்.

# ஸ்பெக்ட்ரம் ஊழலைத் திசைதிருப்ப புலிகள்மீது அபாண்டக் குற்றச்சாட்டு

## சீமான் நேற்று அறிக்கை

(கொழும்பு)

ஸ்பெக்ட்ரம் ஊழலில் கருணாநிதிக்கு நெருக்கமானவர்களின் வீடுகளில் தினம் தோறும் சி.பி.ஐ. சோதனை நடத்தி ஏராளமான ஆவணங்களைக் கைப்பற்றி வரும் நிலையில் இந்தப் பிரச்சினையைத் திசை திருப்ப விடுதலைப் புலிகள் ஊடுருவித் தன்னையும் பிரதமரையும் கொல்லத் திட்டமிட்டிருப்பதாக பொலிஸை ஏவி அறிக்கை விட்டுள்ளார் கருணாநிதி.

ஒட்டு மொத்தமாக தமிழக மக்களுக்குத் தி.மு.க மீதும் கருணாநிதி மீதும் ஏற்பட்டுள்ள அதிருப்தியைத் திசை திருப்பும் நோக்கில் ஈழத் தமிழர்களின் வாழ்வைப் பணயம் வைத்து காங்கிரஸார் தன் மீது சுமத்திய களங்கத்தை போக்க ஏல கிரியிலிருந்து எழுதிய திரைக்கதையை இப்பொழுது பொலிஸார் மூலம் வெளியிட்டுள்ளார் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் விடுத்துள்ள அறிக்கையில் வெளியிட்டுள்ளார்.

இவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனவரியில் சென்னைக்கு வருகை தரும் பிரதமரையும், உள்துறை அமைச்சரையும், தமிழக முதல்வர் கருணாநிதியையும் விடுதலைப்புலிகளின் ஒரு குழுவினர் கொலைசெய்யத் திட்டமிட்டிருப்பதாக மத்திய உளவுத்துறையின் எச்சரிக்கையின் அடிப்படையில் தமிழக டி.ஜி.பி. லத்திகா சரன் வெளியிட்டிருக்கிறார்.

இன்றைய நிலையில் இலங்கையின் சூழலும் இந்தியாவின் சூழலும் பதற்றம் நிறைந்ததாக இருக்கிறது. இந்த இரு நாடுகளிலுமே குடும்ப சர்வாதிகார ஆட்சியின் கீழ் மக்கள் வதைபட்டுக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தின் சூழலோ அறிவிக்கப்படாத மிசா காலத்தைப் போன்று இருக்கிறது. கருணாநிதி குடும்பத்தின் அடக்குமுறையின் கீழ் மக்கள் அஞ்சி நடுங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

முற்றிலுமாக நிலை குலைந்துவிட்ட ஒரு மக்கள் விரோத நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கும் கருணாநிதியின் அரசியல் வரலாற்றில் சூட்டப்பட்ட மகுடம் போல ஸ்பெக்ட்ரம் ஊழல் இருக்கிறது. பல ஆயிரக்கணக்கான கோடி ஸ்பெக்ட்ரம் ஊழலில் கருணாநிதிக்கு நெருக்கமானவர்களின் வீடுகளில் தினம்தோறும் சி.பி.ஐ. சோதனை நடத்தி ஏராளமான ஆவணங்களை கைப்பற்றி வரும் நிலையில் பதறிப்போகிறார்.

இந்த சோதனைகள் காரணமான டில்லி காங்கிரஸ்காரர்களை கண்டிக்க முடியாத கருணாநிதி அவர்களை குசிப்படுத்தவும் மக்களின் கவனத்திலிருந்து பிரச்சினையை திசை திருப்பவும் விடுதலைப்புலிகள் ஊடுருவி தன்னையும், பிரதமரையும் கொல்லத் திட்டமிருப்பதாக பொலிஸார் ஊடாக அறிக்கை வெளியிடுகிறார்.

விடுதலைப்புலிகள் இயக்கமே அழிக்கப்பட்டுவிட்டது என்று அறிவித்த அவர்கள் இன்று தங்கள் பிழைப்புக்காக அவர்களை வைத்து பூச்சாண்டி காட்டுகின்றனர். விடுதலைப்புலிகளால் இவர்களின் உயிருக்க ஆபத்து அல்ல இவர்களால்தான் தமிழினத்திற்கு ஆபத்து என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன் என சீமான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ச–5)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### ஆண்டாள் சரிதம்

திருப்பாவை பாடிய ஆண்டாள் ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்தாள். இவள் அவ்வூர் கோயிலில் உள்ள துளசிச் செடியின் அருகிலிருந்து கண்டெடுக்கப்பட்டாள். அவளை பெரியாழ்வார் தன் செல்ல மகளாக வளர்த்தார். இளவயது முதலே பெருமாளிடம் பாசம் கொண்ட இவள், அவ்வூர் ரங்கமன்னார் சுவாமிக்குத் தந்தை அணிவிக்க எடுத்துச் செல்லும் மாலையை தன் கழுத்தில் போட்டுப் பார்த்து அனுப்புவாள். ஒருமுறை மாலையில் நீண்ட தலைமுடி இருக்க, சந்தேகம் கொண்ட ஆழ்வார் பூக்கட்டிய மகளிடம் விளக்கம் கேட்டார். ஆண்டாள் உண்மையைச் சொல்ல, பெரியாழ்வார் மகளைக் கண்டித்து பெருமாளிடம் மன்னிப்பு கேட்டார். பெருமாளோ, அவள் சூடிய மாலைதான் எனக்கு வேண்டும் எனப் பதிலளிக்க இன்றுவரை ஆண்டாளுக்கு சூடப்பட்ட மாலை பெருமாளுக்கு சூட்டப்படுகிறது. இறுதியாக ஸ்ரீரங்கம் ரங்கநாதரை அவள் சரணடைந்து ஜோதி வடிவாகி வைகுண்டம் சென்றாள். திருப்பதி ஏழுமலையானுக்கும், பிரம்மோற்சவ காலத்தில் ஆண்டாள் மாலை சூடப்படுகிறது.

# வெள்ளி நற்சிந்தனை 153

## பக்தியின் மொழி தமிழ்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு எல்லாம் நாம் முற்பிறவியிலே செய்த துன்பங்கள்தான் காரணம் என்ற நம்பிக்கை எம்மிடையே நிலவுகிறது. அந்த வினையை அழிப்பதற்கு இறைவழிபாடுதான் சிறந்ததென்பர். துன்பத்திலிருந்து எம்மை யாராவது வந்து விடுவிக்கவேண்டும் என எதிர்பார்த்துக் காத்திருப்பதில் எவ்வித பயனும் இல்லை. அப்படியானால் என்ன வழி என்று கேட்கும் மனிதர்களுக்குச் சுந்தரர் வழிகாட்டுகிறார்.

தன்னுடைய மனக்கவலைகளைத் தானே தீர்ப்பதற்கும் ஒரு வழியுண்டு. வினையே வலியது என்ற கருத்தை மாற்றியவர் சுந்தரர். முயற்சி எதையும் செய்யாது துன்பந் தீரவில்லையே என அழுது புலம்பும் மனிதமனத்தை நெறிப்படுத்துவதற்கு இறைவன் பற்றிய சிந்தனையே ஏற்றது. சுந்தரர் இறைவனை மறவாத மனம் பெற்றபோது நடந்த மாற்றத்தை ஒரு பாடலிலே தெளிவாகக் கூறியுள்ளார். இறைவனை மனத்தால் விரும்பித் தொழுதபோது உடல் குளிர்ந்தது. உள்ளமும் தெளிவு பெற்றது. நீயே அடைக்கலம் என முழுமனதோடு வழிபடும்போது எல்லாத் துன்பங்களும் இறையருளால் நீங்கிவிடும் நிலை வந்தது.

[illegible]

தமிழால் விளக்கும் சுந்தரரது பக்தியனுபவம் இயற்கையின்பங்களோடு தொடர்பு கொண்டதாக உள்ளது. அரும்பாக, அலராக, அமுதாக, தேனாக அவருடைய நினைப்பிலே இறைவன் தோன்றினான். தந்தையாக வந்த அறநெறியாளனைப் பிறவியின் வேரறுக்கும் கரும்பாகக் காண்கிறார். இயற்கையில் அவர் பார்வையில் படுகின்ற இன்பந்தருவனவெல்லாம் இறையுருவாகவே தெரிகின்றன. எங்கும் பரவியிருக்கும் இறையாற்றல் சுந்தரரை மெய்சிலிர்க்கவைக்கிறது.

திருக்கழுமலத்தின் இயற்கை வனப்பு சுந்தரரது இறை உணர்வின் ஊற்றுக்காலாக அமைந்தது. "பெருஞ் செங்நெல் நெருங்கிய கழனிகள் நிறைந்த கழுமலம்'' செழிப்பான சூழலாக இருந்தது. மருத நிலவளம் பெற்றிலிருந்தது. 'கழனி' என்ற சொல் நீரது வளத்தையும் நிலத்தது வளத்தையும் சுட்டி நிற்கிறது. நெற்பயிரது கதிர்வரைக்கும் நீர் நிற்கும் வயலே 'கழனி' எனப்படும். நீர்வளத்தால் நெல்விளைவு பெருகும். 'நீருயர நெல்லுயரும்' என்பர். விளைநிலம் கொண்ட வளநகரில் உறையும் இறைவனை வழிபட்டால் துன்பம் எவரையும் அணுகாது. இயற்கையாக இறைவனே தோன்றுவது மனிதனது [illegible]களுக்குத் தெரிவதில்லை.

வேண்டுதல் செய்யும் சுந்தரர் தன் மனம் பண்பட்ட நிலையால் இறைவனைத் தூய தமிழ்மொழியால் பாடுகிறார். உறவு நிலையிலே இறைவனைப் பாவனை செய்து பல அடியார்கள் பாடியுள்ளனர். ஆனால் சுந்தரர் இயற்கை வளத்தையே இறைவனாகக் காண்கிறார். அவருடைய இளமைப் பருவமும் இதற்கு ஒரு காரணமாகும். எனவே, அவருடைய நோக்கத்தைப் பாடலைப்படிக்கின்ற அனைவரும் பெற வேண்டும்.

*'வரும் பெரும் வல்வினை யென்றிருந் தெண்ணி*
*வருந்தலுற்றேன் மறவா மனம் பெற் றேன்*
*விரும்பியென் மனத்திடை மெய்குளிர்ப் பெய்தி*
*வேண்டி நின்றேன் தொழுதேன் விதி யாலே*
*அரும்பினை யலரினை யமுதினைத் தேனை*
*யையனை யறவ னென் பிறவி வேர றுக்கும்*
*கரும்பினைப் பெருஞ் செந்நெல் நெ ருங்கிய கழனிக்*
*கழுமல வளநகர்க்கண்டு கொண் டேனே'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் தொலைக்காட்சி சேவைகள்

## அமைச்சர் கெஹலிய ஆலோசனை

(கொழும்பு)

தொலைக்காட்சிச் சேவைகள் அனைத்தையும் டிஜிட்டல் தொழில்நுட்பம் ஊடாக மேற்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக தகவல் ஊடகத் துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரை முடிவுகளை ஊடகங்களுக்கு அறிவிக்கும் வாராந்த செய்தியாளர்கள் சந்திப்பு நேற்று காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

தகவல் ஊடகத்துறை அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஏற்ப இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பத்தில் உலகம் பயணிக்கும் முன்னேற்றப்பாதைக்கு ஏற்ப இலங்கையிலும் ஒளி, ஒலி பரப்புச் சேவைகளை டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளவே இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

அதன்படி இன்னும் ஐந்து வருட காலத்திற்குள் இலங்கையில் ஒலி,ஒளி பரப்புச் சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டளவில் இந்தத் திட்டத்தை நாட்டில் முழுமையாக அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதனால், 2015 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் இலத்திரனியல் சாதனங்கள் அனைத்தும் டிஜிட்டல் முறைக்கு மாற்றமடைய உள்ளன. அதன் பின்னர் டிஜிட்டல் முறையிலான தொலைக்காட்சிப் பெட்டிகளே பாவனைக்கு கொண்டுவரப்படும்.

இந்த நவீன தொழில் நுட்பத்தின் ஊடாக ஒரு அலைவரிசை ஊடாக பலதரப்பட்ட சேவைகளை வழங்கலாம். தொலைக்காட்சிச் சேவைகளை மேலும் அதிகரிக்கச் செய்யவும் இதன் மூலம் வாய்ப்புக்கிட்டுகிறது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# திருக்கேதீச்சரத்தில் திருவாசக விழா

பாடல் பெற்ற திருத்தலமாகிய திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் திருவாசக விழா திருவெம்பாவையின் இறுதி மூன்று நாட்களான எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. ஈழத்துச் சிவனடியார் திருக் கூட்டத்தினரால் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ள இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவுகள், திருவாசகப் பண்ணிசை, சங்கீத கதாபிரசங்கம் ஆகிய பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறும்.

திருக்கேதீஸ்வரப் திருப்பணிச் சபையின் செயலாளர் புலவர் அ.திருநாவுக்கரசு, திருவாசக மடத்தின் செயலாளர் திருமதி லோகநாயகி அருள்லிங்கம் ஆகியோர் விழாவிற்குத் தலைமை தாங்கவுள்ளனர்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், சைவப்புலர் க.நித்தியதசீதரன் ஆகியோருடைய சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெறும். ஆதீன ஓதுவார் சி.தில்லைமணி , சங்கீதபூஷணம் சி.சிவஞானராஜா , திருவாசகச் செம்மல் வை.செ.தேவராசா ஆகியோரின் திருவாசகப் பண்ணிசை நிகழ்வுகளும், திருமதி விஜயலட்சுமி சிவஞானத்தின் சங்கீத கதாபிரசங்க நிகழ்வும் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ)

## கருத்தரங்கு

யூனியன் ஆயுள் காப்புறுதி அனுசரணையுடன் யாழ். முகாமையாளர் சம்மேளனம், இலங்கை வடபிராந்திய பொறியியலாளர் சங்கம், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் சி.பிரிவு என்பன இணைந்து நடத்தும் கருத்தரங்கு நாளை மறுதினம் பருத்தித்துறை வீதியில் உள்ள ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த பேராசிரியை எஸ். ஆர். டீ.எ. செனிவிரட்ன வளவாளராக கலந்து கொண்டு *தொழில் புரியும் இடங்களில் ஏற்படக் கூடிய விபத்துக்கள், ஆபத்துக்கள் சுகாதாரப் பிரச்சினைகளும் பாதுகாப்பும்* என்ற தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். இக்கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளும்படி ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# யு.என்.ஹபிற்றெற் நிறுவனத்தால் வீடு திருத்த வேலைகளுக்கு நிதியுதவி

பூநகரியைச் சேர்ந்த நல்லூர்,ஆலங்கேணி, முக்கொம்பன் ஆகிய கிராமங்களில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களின் வீடுகளின் திருத்த வேலைக்காக யு. என். ஹபிற்றெற் நிறுவனத்தால் 40 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு திருத்தம் சம்பந்தமான நடைமுறைகள் பற்றி இவர்களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த 15ஆம் திகதி ஆலங்கேணி கிரம சேவகர் அலுவலகத்தில் ஆலங்கேணி கிராம முன்னேற்ற சங்கத்தலைவர் அ.ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இப் பயிற்சி வகுப்பை யு.என். ஹபிற்றெற் நிறுவன தொழில்நுட்ப உத்தியோகத்தர் ம.நிமணன் மற்றும் ஏனைய நிறுவன அலுவலகர்கள் நடத்தினர். வீடுகளின் திருத்த வேலைக்காக இந் நிறுவனத்தால் ஒவ்வொரு குடும்பத்தவருக்கும் தலா 1 1/2 இலட்சம் ரூபா வழங்கப்படும் எனவும் முதற் கட்டமாக ரூபா 90 ஆயிரம் அவரவர் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வேறு நிறுவனங்களால் வீடு அமைப்பது சம்பந்தமான எந்தவித உதவிகள் கிடைக் காதவர்களிடம் இருந்தே இப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.(ஸ்ரீ-3-84)

## பனைமரக்காடு திரைப்பட ஆரம்பவிழா

(யாழ்ப்பாணம்)

திரைப்பட உலகின் ஏஏஏ மூவிஸ் நிறுவனம் தயாரித்து வழங்கவுள்ள "பனைமரக் காடு" திரைப்பட தொடக்க விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வரா வரதராஜப்பெருமான் கோயிலில் விசேட பூசைகளினைத் தொடர்ந்து ஆரம்பமாகவுள்ளது.

இவ் விழாவில் நீண்ட காலத்தின் பின்னர் இந்திய -இலங்கைக் கலைஞர்கள் கூட்டாக இத்திரைப்படத்தில் பணியாற்றவுள்ளனர்.

இந்நிறுவனம் ஏற்கனவே "பேசாத கண்ணும் பேசும்", "காதல்.கொம்", கோடம் பாக்கம் ஆகிய திரைப்படங்களை தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஏஏஏ மூவிஸ் தேசிய ரீதியில் நடாத்திய குறும்பட போட்டிக்கான விருது வழங்கும் நிகழ்வு அன்றைய தினம் பி.ப. 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் 50க்கும் மேற்பட்டவர்கள் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## ஆபாசக் காட்சிகளை பதிவிறக்கம் செய்த நால்வருக்கு அபராதம்

(கொழும்பு)

கண்டியில் ஆபாச இணையத்தளங்களின் காட்சிகளை பதிவிறக்கம் செய்து வைத்திருந்த நால்வருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 10ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஆபாச இணையத் தளங்களிலிருந்து காட்சிகளைப் பதிவிறக்கம் செய்தல், பதி வேற்றம் செய்தல் போன்றவற்றைக் கண்காணிக்கவென கண்டியில் விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டிருந்தது.

அக்குழுவினரே கண்டிப் பகுதியில் பல்வேறு கணனி திருத்துமிடம் மற்றும் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம், பழுது பார்க்குமிடம் என்பவற்றை முற்றுகையிட்டு சோதனைகளை மேற்கொண்டு வந்தனர். அவ்வாறு சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (ஸ்ரீ-4)

## நல்லூர் பிரதேச சபையினால் புனரமைக்கப்படவுள்ள வீதிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை நிகழ்ச்சிதிட்ட அடுத்தாண்டுக்கான மூலதன வேலைத்திட்டத்திற்கமைய வீதிகள் செப்பனிடப்படவுள்ளன. இதற்கமைய கொக்குவில் கேணியடி வீதி 38இலட்சம் ரூபா செலவிலும் குருசு மதவடி வீதி 4 இலட்சம் ரூபா செலவிலும் குருசுமதவடி 2ஆம் குறுக்குவீதி 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் கலட்டி முந்தல் குறுக்குவீதி 2 இலட்சம் ரூபா செலவிலும் பலாலி வீதி முன் ஒழுங்கை 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் சபை விடுதி வீதி 5 இலட்சத்து 25ஆயிரம் ரூபா செலவிலும் கலாசாலை 2 ஆம் வீதி 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் கலாசாலை முதலாம் வீதி 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் பரமேஸ்வரா வீதி 18 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா செலவிலும் பிறவுண் வீதி குறுக்கு ஒழுங்கை 6 இலட்சம் ரூபா செலவிலும் பிள்ளையார் வீதி கொக்குவில் 6 இலட்சம் ரூபா செலவிலும் கொக்குவில் இரண்டாம் ஒழுங்கை 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் அச்சுக்கூடலேன் குறுக்கு வீதி 6 இலட்சம் ரூபா செலவிலும் மணியர் பதி முதலாம் ஒழுங்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவிலும் மாரியம்மன் குறுக்கு வீதி 9 இலட்சம் ரூபா செலவிலும் கல்லிட்டுத் தாரிட்டு புனரமைக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


## பருத்தித்துறை நகராட்சி மன்றம் வரவு-செலவுத்திட்டம் - 2011

*255 ஆம் அதிகாரமான நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 178(3)ம் பிரிவிற்கமைவாக பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் 2011 ஆம் வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டம் 17.12.2010ஆம் திகதி லிருந்து பொதுமக்கள் பார்வைக்காக நகரசபை அலுவலகத்தில் வைக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*நகராட்சி மன்றம்*
*பருத்தித்துறை*
*16.12.2010*

*அ.அ.நடராசா*
*செயலாளர்,*
*நகராட்சி மன்றம், பருத்தித்துறை.*

*(சி-1835)*

## அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

*குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் 528 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம்.*

*மரணசாதனமில்லாது மரணித்த இல. 5, சென்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வணபிதா மரியாம்பிள்ளை ததேயு சரத்ஜீவன் அவர்களின் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில்*

**மரணித்தவர்**

*செல்வி மடோனா கார்மேல் நித்திலாமரியாம்பிள்ளை இல.5, சென்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்.*

**மனுதார்**

*வழ.இல:த/09/10*

எதிர்

*01. திருமதி கசில்டா மங்கள நாயகி மரயாம்பிள்ளை*
*02. வண. அருட்சகோதரி மரினா மரியாம்பிள்ளை இருவரும் இல.5, சென்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்.*
*03. மரியாம்பிள்ளை யூட் சூரிய ஜீவன் யாழ்ப்பாணம் தற்போது அமெரிக்கா* Jude Sooriyajeevan 4810 Reval Court, Liverpool NY 13088,USA.
*04. மரியாம்பிள்ளை யூட்சென் சக்திஜிவன் இல.48, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.*

**எதிர்மனுதார்கள்**

*இவ்வழக்கு மேற்குறித்த மனுதாரினால் மேற்குறித்த மரணமடைந்தவரின் மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையினால் யாராவது ஆட்சேபனை இருப்பின் இந் நீதிமன்றில் 2011 ஆம் ஆண்டு தை மாதம் 21ஆம் திகதி இம்மன்றில் காலை 9.00 மணிக்கு சமுகமளித்து தெரிவிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறீர்கள்.*

**வரைபு:**

*ச.இளங்கோவன்*
*மனுதார் சட்டத்தரணி*

*மன்றின் கட்டளைப்படி*
*பதிவாளர்.*

*(3243)*

## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

*மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு சங்கத்தின் தலைவர் திரு.ந.குகானந்தராஜா அவர்கள் தலைமையில் றிம்மர் மண்டபத்தில் (வேம்படி வீதி, யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில்) ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தயவுசெய்து சங்க உறுப் பினர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

**வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி சேவைச்சங்கம்**

*முனீஸ்வரன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

T.p:- 021 320 5722

*(3253)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை கூட்டத்திலிருந்து அமைச்சர் மேர்வின் வெளியேற்றம்

அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து அமைச்சர் மேர்வின் சில்வா வெளியேற்றப்பட்டிருந்ததுடன் ஜனாதிபதியிடமிருந்து நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டதாகவும் தெரியவருகின்றது.

அமைச்சரவைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்கையில் கண்ணியமான ஆடைகளை அணிந்து வரவேண்டும் என்று அண்மையில் அனைத்து அமைச்சர்களுக்கும் ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

ஆயினும் நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்திற்கு சமுகமளித்த பொதுமக்கள் தொடர்பில் மேர்வின் சில்வா குட்டைக் கை பற்றிக் சேட் அணிந்து வந்திருந்தார்.

அதனைக் கண்ணுற்ற ஜனாதிபதி உடனடியாக அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து வெளியேறுமாறு அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு உத்தரவிட்டதுடன் குண்டர்கள் போன்று கண்டபடி ஆடையணிந்து கொண்டு வரவேண்டாம் என்றும் எச்சரித்துள்ளார். (ச-5)

# நூல்நிலையத் திறப்பு விழா

அகில இலங்கை சைவ நற்பணி மன்றம், இந்து சேவா சங்கம் யாழ்.மாவட்ட ஒழுக்கநெறிப் பண்பாட்டுக் கழகம், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தினர், நயினாதீவு அமுத சுரபி அன்னதான சபையினர் இணைந்து ஆரம்பிக்கும் சைவன் நூல் நிலையத் திறப்பு விழா இன்று மாலை 3.31 மணியளவில் நயினாதீவு ஆலங்குளம் வீதி 2-ம் வட்டாரத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், விசேட விருந்தினராக பச்சிலைப்பள்ளிப் பிரதேச தேசிய இளைஞர் கழக சம்மேளன இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மதனதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-7,106)

# தேசிய கீதம்

ஆனை வாய்க் கரும்போ?
அனலிடை ப்பட்ட புழுவோ?
சட்டியி லிருந்து சற்றே சறுக்கி;
அடுப்பினில் விழுந்த மனிதர் நாம்
தாவார மில்லான், தனக்கொரு வீடில்லான்,
தேவா ரம்மோதுதல் ஏதுக்கடி?
தேசிய மேயில்லார்க்கு
தேசிய கீதமொரு பொல்லாப் போடி?
பொறு மையிழந்தவர் தம்மைப் போற்றி
இசைப்பர் இன்னும் கோடி,
இறைவ னுண்டென்றால்
சேரு மொரு புது வாழ்வு தேடி.

-அறியாதவன்

# இந்திய அணி சரிந்தது

மோர்கல், ஸ்ரெயின் அபார பந்துவீச்சில் இந்திய அணி நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவில் 09 விக்கெட்டுக்களையிழந்து 136 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி மூன்று டெஸ்ட், ஒரே ஒரு இருபது-20 போட்டி மற்றும் 05 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று செஞ்சூரியனில் ஆரம்பமானது. இப்போட்டி மழை காரணமாக பிற்பகலே ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு மோர்கல்- ஸ்ரெய்ன் ஜோடி ஆரம்பம் முதலே அச்சுறுத்தினர்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சேவாக் பூச்சியத்துடனும் காம்பீர் 05 ஓட்டங்களுடனும் டிராவிட் 14 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 27 ஓட்டங்களை எடுத்து 03 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து லக்ஷ்மன் களமிறங்க மறுமுனையில் டெண்டுல்கர் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

இதில் வி.வி.எஸ்.லக்ஷ்மன் 07 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய சுரேஸ் ரெய்னா ஒரு ஓட்டத்துடன் வந்த வேகத்திலேயே அரங்கு திரும்பினார்.

அடுத்து அணித்தலைவர் தோனி களமிறங்க மறுமுனையில் சச்சின் டெண்டுல்கர் 34 பந்துகளில் (08 பவுண்டரிகள் உட்பட) 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்து அதிரடி காட்டிய ஹர்பஜன் சிங் 25 பந்துகளில் (04 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 27 ஓட்டங்களை எடுத்து ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த இஷாந்த் சர்மாவும், ஸ்ரீசாந்தும் பூச்சியத்துடன் வெளியேறினர்.

இந்நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில 09 விக்கெட்டுக்களையிழந்து 136 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் தோனி 33 ஓட்டங்களுடனும், யூனாட் கட் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் மோர்னி மோர்க்கல் 04 விக்கெட்டுக்களையும், ஸ்ரெய்ன் 03 விக்கெட்டுக்களையும், ஜெக் கலிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# இங்கிலாந்து வேகக் கூட்டணி மிரட்டலில் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் சுருண்டது

(பேர்த்)

இங்கிலாந்து அணியின் வேகக் கூட்டணியின் மிரட்டலான பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 268 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் மோதும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத் தொடரின் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் இரண்டாவது டெஸ்டில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் நேற்று பேர்த்தில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரோரஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

இதில் ஹக்ஸ் 02, அணித்தலைவர் பொன்டிங் 12, கிளார்க் 04, வோட்ஷன் 13 ஓட்டங்களுடன் ஏமாற்ற அவுஸ்திரேலிய அணி 36 ஓட்டங்களை எடுத்து 04 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் மைக்கல் ஹசி பொறுப்புடன் ஆடி அணிக்கு நம்பிக்கை அளிக்க மறுமுனையில் சிமித் 07 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் 06-வது விக்கெட்டுக்காக ஹசியுடன் இணைந்த ஹடின் பொறுப்பான ஆட்டத்தை வழங்கினார்.

மறுமுனையில் மைக்கல் ஹசி அரைச்சதம் பெற அவுஸ்திரேலிய அணி 100 ஓட்டங்களைத் தாண்டியது.


எனினும் மைக்கல் ஹசி 104 பந்துகளில் (09 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 61 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ஜோன்சன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளிக்க மறுமுனையில் ஹடின் அரைச்சதம் கடந்தார்.

எனினும் ஹடின் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 189 ஓட்டங்களை எடுத்து 07 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து வந்த ஹரிஸ் 03 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து சிடில் களமிறங்க மறுமுனையில் ஜோன்சன் அரைச்சதம் கடந்தார்.



இதில் ஜோன்சன் 93 பந்துகளில் (08 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 62 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் சிடில் தனது பங்குக்கு பிரகாசிக்க அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 268 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் பீற்றர் சிடில் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் அன்டர்சன், திரீம்லற் ஆகியோர் தலா 03 விக்கெட்டுக்களையும், பின், சுவான் தலா 02 விக்கெட்டுக்களையும் சாய்த் தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களை எடுத்தது.

இதில் குக் 17, ஸ்ரோரஸ் 12 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.



பிலிப்பைன்ஸில் சமாதானத்துக்கான உயர் விருது பெற்ற யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்கவைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதில் கட்டளைத்தளபதி அழைத்துவரப்படுவதையும், நினைவுப் பரிசினை யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வழங்கிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். படங்கள் எஸ்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனைக்கோட்டையில்...

வீட்டின் அனைத்துப் பொருட்களையும் உடைத்தும் தூக்கியும் எறிந்துள்ளனர்.

பின்னர் அறையிலிருந்த ரூ. 3 இலட்சத்துக்கு மேற்பட்ட நகைகளையும் சைக்கிளையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

வீட்டில்கொள்ளையிடப்பட்டவேளை நன்றாக மழை பெய்து கொண்டிருந்ததனால் அக்கம் பக்கம் யாருக்கும் என்ன நடக்கின்றது என்பது தெரியவில்லை. இது குறித்துபொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் கே.கே.எஸ். வீதியில் இருக்கும் வீடு ஒன்றிற்கு வானில் வந்த கொள்ளையர்கள் வீட்டுக்காரர்களை கதவினைத் திறக்கும்படி மிரட்டியுள்ளனர்.

அவர்கள் உடனே அருகிலுள்ள பேராசிரியர் வீட்டிற்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு திருடர்கள் வந்து இருப்பதாகத் தகவல் கூறினர்.

பேராசிரியர் பொலிஸ் நிலையத்திற்குத் தொடர்பு கொண்டு தகவல் வழங்கி மீண்டும் இவர்களுக்குத் தகவல் வழங்க தொலைபேசியை அழைத்த வேளை வீட்டுக்காரர் உசாராகி விட்டதை உணர்ந்த கொள்ளையர்கள் கொள்ளையடிப்பதனை விட்டு விட்டுச் சென்று விட்டனர்.

இப்படியான அடுத்தடுத்த கொள்ளை நடவடிக்கைகளினால் யாழ்ப்பாண மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். (ச-5,6)


## கிருஷ்ணா அடகு கடை

இல.370,கே.கே.எஸ்.வீதி,யாழ்ப்பாணம்.

பதிவு இல.: J/DS/BR/472

(C-1836)

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2009-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31-ம் திகதி [31.10.2009]இற்கு முன்னர் அடகு நகைகள் யாவற்றையும் 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் திகதி [15.01.2011]க்கு முன்பு மீட்கவும்.மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தை பெறுமதிப்படி அடகு தொகையை கூட்டி பெற்றுக் கொள்ளவும். அல்லாவிடில் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். இரண்டும் செய்யத் தவறின் 15.01.2011ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இல.370,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 021222 5046

- உரிமையாளர்


# லியம் பொக்ஸ் விஜயத்து...

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் துணைவி விடுத்த அழைப்புக்கு இணங் கவே லியம் பொக்ஸ் கொழும்பு செல்வதாக அவரின் அலுவலகம் குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸ் கொழும்புக்கு விஜயம் செய்வதன் மூலம் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கு சவால் விடுக்கத் தீர்மானித்துள்ளதாக அந்நாட்டின் கார்டியன் பத்திரிகையின் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸின் கொழும்பு விஜயத்தினால் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் அதிருப்தி கொண்டுள்ளதாக அந்நாட்டின் நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வன்னியில் கடந்த வருடம் இடம்பெற்ற போரின்போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்துச் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனப் பிரித்தானிய அரசாங்கம் வலியுறுத்தி வருகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் லண்டனுக்கு மேற்கொண்ட விஜயம் தோல்வியில் முடிபடைந்ததைத் தொடர்ந்து இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸின் கொழும்பு விஜயம் தொடர்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் பிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸ் தனிப்பட்ட முறையில் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ரி.ஆர்.ஓ...

நீதிபதி தீபாலி விஜயசுந்தர குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

குறித்த 5பேரும் புனர்வாழ்வுக் கழகத்தின் மூத்த தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.இவர்கள் தொடர்பான வழக்குகள்நேற்றுவிசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது குறித்த ஐந்து பேரும் நீதிமன்றில் ஆஜராகவில்லை.

இதனையடுத்து இவர்களுக்கான பிடியாணை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-7)

# விடுதலைப் புலிகளை...

புலிகளினால் இந்தியாவின் பிரதமர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக இந்திய உளவுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை கொலை செய்வதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் திட்டமிடுவதாக இந்திய புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புலிகள் மீண்டும் ஒன்றிணைவதற்கு முயற்சிப்பதுடன் பிரதமர் மன்மோகன்சிங்,உள்துறைஅமைச்சர் ப.சிதம்பரம்,முதலமைச்சர் மு.கருணாநிதி ஆகியோரை இலக்கு வைத்து பாரிய தாக்குதல்களை தொடுப்பதற்கும் திட்டமிடுவதாக அச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியாவுக்கு உதவுவதற்கு தாம் தயாராக இருப்பதாக அமைச்சர் ஹெகலிய கூறினார். (ச-5)

# படையினரின் பாவனை...

சமாதானத்திற்கான உயர்ந்த விருதைப் பெற்றுக் கொண்டமைக்காக நான் பெருமைப்படுகிறேன். தெற்காசியநாடுகளிலிருந்து விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நான் ஒருவனே. அதேவேளை இராணுவ வீரர் ஒருவருக்கு இத்தகைய விருது கிடைப்பது பெருமைக்குரியது.

இந்த நாட்டில் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

இன,மத,மொழி பேதங்களுள்ள நாடு ஒன்று அபிவிருத்தியில் முன்னேற்றம் காண முடியாது. எனவே மக்கள் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி வாழ வேண்டும்.

தமிழ் மக்களிடம் நான் மனம் திறந்து பேச மொழி தடையாக உள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்காக தமிழ் மொழியைக் கற்று வருகிறேன். அத்தோடு எனது குடும்பத்தினரையும் தமிழ் மொழியைக் கற்குமாறும் கூறியுள்ளேன்.

யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களின் அபிவிருத்திக்கும் மீள்குடியேற்றத்திற்கும் என்னாலான உதவிகளைச் செய்துவருகிறேன். அத்தோடு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மீள்குடியேற்றப் பணியில் தீவிரம் காட்டி வருகிறார். அவரின் பணி பாராட்டுக்குரியது. அவரின் வேண்டுகோளுக்கு இணங்க பல பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது.குறிப்பாக யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பல பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சங்கானையில் அண்மையில் நடைபெற்ற சம்பவத்திற்காக நான் இராணுவத்தின் சார்பாக மக்களிடமும் பாதிப்புற்ற குடும்பத்தினரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன்.

எனினும் இத்தகைய அசம்பாவிதங்கள் ஏற்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)


## MyWay English ஆங்கில பயிற்சிநெறி

ஆரம்பம் : 18.12.2010 காலம் : சனி, ஞாயிறு – 3 மாதம்

அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் A/L எழதிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவுகள் : 8 – 9, 9 - 10, 10 – 11, 11 - 12, 1 – 2, 2 - 3

தனியார் அலுவலர், இளைஞர் யுவதிகளுக்கும் அனுமதி உண்டு

இலக்கண கற்றலோ, எழுத்துப்பயிற்சியோ இன்றி ஆங்கிலத்தில் ஒரு சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் பேச முடியும். வகுப்புநேரம் தவிர ஒரு நிமிடமேனும் மேலதிகமாக செலவுசெய்ய தேவையில்லை

ஒவ்வொரு பிரிவிலும் ஒருசில இடங்களுக்கே அனுமதி உண்டு

MyWay 182, Stanley Rd Jaffna 077 33 63 456


# செம்மைப்படுத்தப்பட்ட...

றம் கோரியிருந்தது.

எனினும் தனியார் தொலைக் காட்சி நிறுவனமொன்று மூலப்பிரதி தொலைந்துவிட்டதாக தெரிவித்தமையை அடுத்து செம்மைபடுத்தப்பட்ட பிரதியைக் கொண்டு விசாரணையை முன்னெடுக்க முடியுமா? என்பது தொடர்பாக நீதிமன்றம் ஆராய்ந்து வந்த நிலையில் அது நேற்று தனது தீர்மானத்தை அறிவித்தது.

எனினும் மூலப்பிரதி இன்றி பிரதிவாதிக்கு எதிரான வீடியோ சாட்சியங்களை மேற்கொள்ள முடியாதென பிரதிவாதியின் சட்டத்தரணி நளின் லதுபாஹெட்டி அடிப்படை ஆட்சேபனையை தெரிவித்திருந்தார்.

இந்த ஆட்சேபனையை நேற்று நிராகரித்த மேல் நீதிமன்றத்தின் மூவர் அடங்கிய நீதிபதிகள் வீடியோ சாட்சியத்துக்கு அனுமதி வழங்கினர்.

வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றபோது மனுதாரர் தரப்பில் முன்னிலையான பிரதி சொலிஸிட்டர்வசந்தநவரட்ன பண்டார,இந்த வழக்கிலிருந்து விலகியிருந்தார்.

இதனையடுத்து அரச தரப்பில் பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் புவனிக்க அலுவிகார நியமிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் தாம் இன்று இந்த வழக்கில் சம்பந்தப்படுவதாலும் மூலப் பிரதியின்றி வீடியோ சாட்சிகளை ஏற்றுக்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமையாலும் தமக்கு கால அவகாசம் தேவையென புவனிக்கஅலுவிகார மன்றில்கோரிக்கை விடுத்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜனவரி மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளில் நடத்த தீர்மானித்தது. (ச-5)


## சுந்தர்சன்

நிறுவனத்தின்

மாபெரும் மலிவு விற்பனை



30% வரையான விலைக்கழிவு

அனைத்துப் பொருட்களும் உத்தரவாதத்துடன்

இத்தினத்தில் கொள்வனவு செய்யும் அதிஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 30 பேருக்கு ரூபா 110,000 பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்

- Fridge
- Washing Machine
- LCD, LED, CRT TVs
- Water Filter
- Electric Kettle
- Toasters
- Rice Cooker with steamer
- Iron Box
- Table fan
- Pedestal fan
- Rechargeable Torch
- Blenders
- Electric Oven
- Gas Cooker
- Home Theater System
- Bulbs
- Chandelier
- Wall lamps
- Emersion Heater
- Table lamps
- Egg beater
- Sunk switches
- Mobile phones
- Kevilton, Belgryan, Aura CFL Bulbs
- DVD Players
- Anton (Dolphin) Plastics

18.12.2010 தொடக்கம் 24.12.2010 வரை


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] உள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org